விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலம்புரி

பக்கங்கள் : இருபது

Valampurii


சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 10 செவ்வாய்க்கிழமை (25.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006

# நாட்டின் பல பாகங்கள் காலநிலையால் பாதிப்பு!

## உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 50ஐ தாண்டும்

கடந்த சில தினங்களாக வடக்குக் கிழக்கு உட்பட பல மாவட்டங்களில் தொடரும் சீரற்ற காலநிலை, இயற்கை அழிவு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46ஆக உயர்வடைந்துள்ளது. மேலும் 15 பேர் காணாமல் போயும் 17 பேர் காயமடைந்தும் உள்ளதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவித்துள்ளன. இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50ஐ தாண்டலாம் என அஞ்சப்படுகிறது. (19ஆம் பக்கம் பார்க்க)

## தானாக திறந்த வான் கதவுகள்



விக்டோரியா நீர்த்தேக்க அணைக்கட்டிலுள்ள வான் கதவுகளில் இரண்டு வான் கதவுகள் தானாகவே திறந்து கொண்டன. ஒரு வருடத்திற்கு முன்னர் திறக்கப்பட்ட வான் கதவுகளே இவ்வாறு நேற்றுத் திங்கட்கிழமை திறந்து கொண்டுள்ளன என்று நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

## விரிவுரையாளர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

2013-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கல்வி மற்றும் ஆய்வுக் கொடுப்பனவுகளை 25 முதல் 30 வீதத்தால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தினர் நடத்திய 100 நாள் வேலை நிறுத்தத்தின் பின்னர் அரசாங்கத்துக்கும் - பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## வாகன விபத்தில் இராணுவ வீரர் பலி

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இராணுவ வீரர் ஒருவர் பலியாகியுள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கனகராயன் குளத்திலேயே இந்த சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

லொறியொன்று வீதியை விட்டுவிலகி இராணுவ காவலரணில் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய குறிப்பிட்டார். (19ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளத்தில் மிதக்கும் கண்ணி வெடிகள் மீட்பு

### அவசர நிலைமை வவுனியாவில் பிரகடனம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் நொச்சிக்குளம் வீதியில் வெள்ளத்தில் மிதந்து வந்த கண்ணி வெடிகள் இரண்டு மற்றும் கைக்குண்டுகள் இரண்டும் படையினரால் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பெய்து வரும் அடைமழை காரணமாக பெரும்பாலான குளங்கள் நிரம்பி வழிகின்றன. இந்நிலையில், வவுனியாவில் குளங்கள் நிரம்பி பெருந்தெருக்களில் கரை புரண்டு ஓடுவதால் மண் படைகள் வெள்ளத்தோடு அள்ளுண்டு போகின்றன.

இப்பகுதி மக்கள் இது குறித்து படையினருக்கு அறிவித்துள்ளனர். படையினர் அந்த வெடிப்பொருட்களை மீட்டு செயலிழக்க செய்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## சுகாதார அமைச்சர் விரைவில் ஓய்வு!

(கொழும்பு)

இலங்கையின் சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தமது அரசியல் வாழ்கையில் இருந்து விரைவில் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

அண்மைய தினமொன்றில் தாம் அரசியலில் இருந்து விலகப் போவதாக நேற்று பொலன்நறுவை பாடசாலையொன்றில் இடம்பெற்ற உபகரண கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## 11 வான் கதவுகள் திறக்கப்பட்டன

(மல்லாவி)

கிளிநொச்சி, இரணைமடு குளத்தில் 11 வான் கதவுகளும் நேற்று முன்தினமும் நேற்றும் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச தன்நகண்டி, மருதநகர் கிராமத்தில் உள்ள 23 குடும்பத்தினரைச் சேர்ந்த 86 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி தன்நகண்டி அ.த.க. பாடசாலையில் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

இவர்களுக் (20ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போவது குறித்து சர்வதேசத்திடம் முறையிடக் கூடாது!

### படையினர் எச்சரிக்கை

(திருகோணமலை)

தங்களுடைய உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தைச் சேர்ந்த யாராவது காணாமல் போய்விட்டால் அவர்கள் தொடர்பில் சர்வதேச அமைப்புகளிடம் முறையிடக்கூடாது என்று படையினர் எச்சரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பிபிசி செய்திச்சேவை வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்புத் தரப்பினரால் இவ்வாறு எச்சரிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசங்களில் கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களிடமோ (20ஆம் பக்கம் பார்க்க)




## பாராளுமன்றை ஒத்தி வைக்குமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகளை ஒத்தி வைக்குமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் ஆண்டில் ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைக்குமாறு சிரேஷ்ட அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ வித்தாரண மற்றும் டியூ.குணசேகர போன்றோர் கோரியுள்ளனர்.

பாராளுமன்றிற்கும் நீதிமன்றக் கட்டமைப்பிற்கும் இடையிலான முரண்பாடுகள் களையப்படும் வரையில் பாராளுமன்ற அமர்வுகளை ஒத்தி வைக்குமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழு வெளியிட்ட அறிக்கையை சுயாதீன ஆணைக்குழுவொன்றின் மூலம் விசாரணை (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் அவலநிலையை ஐ.நாவில் எடுத்துரைப்போம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கின்ற மனித உரிமை மாநாட்டின்போது தமிழர்களின் அவலநிலை முன்னிலைப்படுத்தப்படும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல் கட்சியினால் எவ்விதமான சமர்ப்புகளையும் முன்வைக்க முடியாது. எனினும் வடக்கு கிழக்கு மாகாண மக்களின் அவல நிலையை வெளிக்கொண்டு வருவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்.

எங்களுக்குவாய்ப்புகள்இருக்கின்றது?என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது எனினும் கிடைக்கின்ற வாய்ப்புகளை அதிகபட்சம் பயன்படுத்த நாம் தயாராக இருக்கிறோம் என்றார். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### பிரதம நீதியரசர் விவகாரம்

# தெரிவுக்குழு விசாரணை வீடியோவை அரசாங்கம் வெளியிடத் தீர்மானம்

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிடம் குற்றப்பிரேரணை தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழு நடத்திய விசாரணையின்போது பதிவு செய்யப்பட்ட வீடியோவை பொதுமக்களுக்கு வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவுக்குழுவின் ஆளும் கட்சி உறுப்பினரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் விசாரணைகள் நடத்தப்பட்ட விதத்தை பொதுமக்கள் தெரிந்துகொள்ளலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் நீதியரசர் மீதான விசாரணைகளின்போது அவரை அவமதிக்கும் விதத்திலான வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டதுடன், ஒழுங்கான முறையில் அவர் நடத்தப்படவில்லை எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதன் காரணமாகவேதான் விசாரணைகளின் இடைநடுவே, வெளிநடப்புச் செய்ததாக ஷிராணி பண்டாரநாயக்கவும் அதன்போது தெரிவித்திருந்தார்.

மேலும் விசாரணைக்குழுவில் அங்கம் வகித்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நால்வரும் பிரதம நீதியரசர் உரிய முறையில் நடத்தப்படவில்லை என அரசாங்க உறுப்பினர்கள் சிலர் மீது குற்றம் சுமத்தி இருந்ததுடன் விசாரணைகளின்போது பதிவு செய்யப்பட்ட வீடியோ பதிவை வெளியிடுமாறும் சவால் விடுத்திருந்தனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லையென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தொம்பே பூகொடை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றவியல் பிரேரணை தொடர்பான அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவித்தார்.

ஆயிரம் பக்கங்களைக் கொண்ட குற்றப் பிரேரணை 6-ம் திகதி தயாரிக்கப்பட்டு 7-ம் திகதி அறிக்கை எழுத்தப்படுகிறது. 8-ம் திகதி காலை 9 மணிக்கு அறிக்கை நாடாளுமன்றத்தில் தெரிவுக்குழுவினால் சமர்ப்பிக்கப்படுகிறது.

இதைப் பார்த்த எனது நண்பர் ஒருவர் சொல்கிறார்: நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களையும் மூடிவிட்டு இலங்கையிலுள்ள அனைத்து வழக்குகளையும் நாடாளுமன்றத்திற்கு எடுத்தால் எவ்வளவு நல்லதென்றார்.

அது உண்மைதானே! 72 மணிநேரத்தில் விசாரணை செய்து சாட்சியாளர் நியமித்து குற்றவாளி என்று நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க முடியுமானால்,

20-30 வருடங்கள் நீதிமன்ற வழக்குகள் என்று தேடி அலையவேண்டியதில்லை என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (ந-1)

### வவுனியா மாவட்ட

# அரசு ஊழியர்களுக்கு விடுமுறை ரத்து

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதுவரை இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கான அனர்த்த நிவாரண வேலைகளை முன்னெடுப்பதற்காக நேற்று முதல் வவுனியா மாவட்ட அரச ஊழியர்களுக்கான விடுமுறைகள் ரத்தாக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர ஏனையோர் சமுகம்தர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-250)

# மதுபானசாலைகள் இன்று மூடப்படும்

மதுபானசாலைகள் யாவும் நத்தார் தினமான இன்று செவ்வாய்கிழமை மூடப்படும் என்று அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மதுபான சாலைகள் மட்டுமன்றி ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றில் உள்ள மதுபான விற்பனைக் கூடங்களை யும் மூடுமாறு பணித்துள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ந-[illegible])

# விஞ்ஞான வினாத்தாள் வெளியானது உண்மை

## - கல்வி அமைச்சர்

2012-ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் விஞ்ஞான வினாப் பத்திரங்கள் பரீட்சை நடைபெற்ற தினத்திற்கு முன்னதாகவே வெளியானமை விசாரணைகளிலிருந்து உறுதியாகியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவிக்கையில்,

விஞ்ஞான பாட வினாத்தாளில் 19ஆம்



இலக்க வினாவிற்கு விடை எழுதிய அனைத்து மாணவர்களுக்கும் புள்ளி வழங்கப்படும்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாட வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியானமை விசாரணைகளிலிருந்து உறுதியாகியுள்ளது. இதன்காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (ந-1)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் வாகன விபத்தில் படுகாயம்

## யாழ். நீர்வேலி பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்வேலி கரந்தன் சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நால்வர் மீது கன்ரர் ரக வாகனமொன்று மோதியுள்ளது.

இதனையடுத்து இவ்விபத்தில் படுகாயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி நவக்கிரி பகுதியைச் சேர்ந்த கெங்காதரன் (வயது 45), அவரது மனைவி சனாதினி (வயது 42) மற்றும் அவர்களின் பிள்ளைகளான சங்கவி (வயது 10), கவிதரன் (வயது 7) ஆகியோரே இவ்விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-1)

### அபுதாபியில் தடுத்துவைக்கப்பட்டிருந்த

# 12 பெண்கள் நாடு திரும்பினர்

அபுதாபியில் தனியார் நிறுவனம் ஒன் றில் பலாத்காரமாக தடுத்துவைத்து சேவையில் ஈடுபடுத்திய இலங்கையைச் சேர்ந்த 101 பணிப் பெண்களில் 12 பேர் நேற்றைய தினம் நாடு திரும்பினர்.

அபுதாபி முசாப் நகரிலுள்ள தனியார் சுத்திகரிப்பு நிறுவனத்திலேயே அவர்கள் பலாத்காரமாக தடுத்து வைக்கப்பட்டு பணிக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அந்த நாட்டிலுள்ள தொழில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமையவே 101 பெண்களில் 22 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 12 பேர் இலங்கையர்களாவர்.

அவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகவே நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நீர்கொழும்பு, வென்னப்புவ, கம்பஹா, பூகொட மற்றும் ஹங்வெல்ல போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 22 வயதிற்கும் 38 வயதிற்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு நாட்டுக்கு திரும்பியுள்ளனர்.

பணிப்பெண்களாக தொடர்ந்தும் சேவையாற்ற முடியாதவர்களும் கர்ப்பப்பை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களும் இவர்களில் அடங்குவதாக அந்நாட்டு வைத்தியர்கள் சிபாரிசு செய்துள்ளனர்.

இந்த நிறுவனத்தால் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்பட்டவர்களில் இலங்கையர்கள் 300 பேர் இருப்பதாக நாடு திரும்பியவர்கள் தெரிவித்தனர். (ந-2)




# யாழ்.மாநகர சபையில் நேற்று அபிவிருத்தித் திட்ட கலந்துரையாடல்

## பலரது கருத்துகள் முன்வைக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இனிச் செய்யப்பட வேண்டிய திட்டங்கள் என்பன தொடர்பில் நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்த பொதுக் கூட்டத்தில் அலசி ஆராயப்பட்டது.

முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட கூட்டம் பிற்பகல் 3 மணிவரை நீடித்தது.

முதலில் ஆரம்பித்த பிரதி மேயர் எம்.ஏ. றமீஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் மிகவும் கரிசனையாகவுள்ளார்.

இங்கு மிக வேகமாக அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது.

2013ஆம் ஆண்டிற்குள் அனைத்து வீதிகளும் காப்பெற்றாக மாறிவிடும். மூன்று மாதப் பகுதிக்குள் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோலை வரிப் பகுதிகளில் வேலைத் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளது என அபிவிருத்தித் திட்டங்களை அடுக்கிக்கொண்டு சென்று, இறுதியில் மாநகரசபையின் ஊழியர்களை பாராட்டும் பிரேரணையினை முன்வைத்துவிட்டு அமர்ந்தார்.

அதன்பின்னர் எழும்பிய எதிர்க் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி,

மாநகர சபைக்கு கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதி செலவிடப்படுகிறது எனவும், கடந்த வருடத்தில் 140 மில்லியன் ரூபாய் பணம் எம்மக்களிடத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது. இதில் 25 வீதமான பங்கே மக்கள் அபிவிருத்திக்காக செலவிடப்படுகிறது எனவும்,

அபிவிருத்தி முன்னைய காலங்களைவிட குறைந்து செல்கிறது என தனது கணிப்பைத் தெரிவித்தார்.

அத்தோடு மாநகரசபை ஊழியர்கள் திறம்பட செயற்பட்டுள்ளார்கள் எனவும் பாராட்டுத் தெரிவித்தார்.

எதிர்க் கட்சியினரின் பாராட்டினைக் கேட்டு மனம்குளிர்ந்த முதல்வர்,

யேசுபிரான் உண்மையாகவே இவ்வருடம் பிறக்கப்போகிறார்தான் என்றார்.

இதில் குறுக்கிட்ட சங்கையா, நாம் உங்களைச் சொல்லவில்லை. அரசியல் மாற்றம் வந்தாலும் திறமையாகச் செயற்படும் ஊழியர்களைத்தான் பாராட்டினோம் எனக் கூறி முதல்வரின் மகிழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அடுத்து எழுந்த எதிர்க் கட்சி உறுப்பினர் விந்தன்,

வீதி அபிவிருத்தி, விளக்குப் பொருத்தல் என்பனவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அதற்கு நான் அதிகாரிகளை பாராட்டுகிறேன்.

மேலும் எமது அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் வடக்கில் 20 வீதமும், தெற்கில் 80 வீதமும் அபிவிருத்தி அடைந்துள்ளது.

இதற்கு காரணம் இங்கு நடைபெற்ற போர்தான் எனக்கூறி அமர்ந்தார்.

வெள்ள அனர்த்தத்தினால் கிழக்கு மற்றும் வடக்கில் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எமது சபை உதவிகள் வழங்கவேண்டும் என முதல்வர் பிரேரணை ஒன்றினை சபையில் முன்வைத்தார்.

இதனை வரவேற்ற சுகாதாரக் குழுத் தலைவர் எஸ்.விஜயகாந், வடக்கு மாகாணத்திற்கு 2 இலட்சம், கிழக்கு மாகாணத்திற்கு ஒரு இலட்சம் வெள்ள நிவாரணமாக வழங்க வேண்டும் எனக் கூறினார்.

இதனை ஏற்றுக் கொண்ட சபையினர், இதற்கு மேலான தொகையினை கொடுக்க முடியுமாயின் வழங்குங்கள் என்று கூறினர்.

பின்னர் யாழ்.பொது நூலகத்திற்கு வர்ணம் தீட்டுதல், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு அபிவிருத்தி என்பன தொடர்பில் ஆராயப்பட்டதோடு, சுகாதார மற்றும் சுத்திகரிப்பு தொழிலாளர் தொடர்பில் சுமார் ஒரு மணித்தியாலம் கலந்துரையாடப்பட்டது.

இதில் நிதிக்குழு அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு, ஆயிரத்து 210 ஊழியர்கள் இங்கு வேலை செய்வதனை அரசு அங்கீகரித்துள்ளதாகவும் முதல்வர் கூறினார்.

இதன் பிறகு வீதி அபிவிருத்தி, குப்பை கொட்டுதல், குப்பை அள்ளுதல் என்பன தொடர்பில் விவாதிக்கப்பட்டு இறுதியில் கூட்டம் பிற்பகல் 3 மணியளவில் நிறைவுக்கு வந்தது. (ந-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மதுவின் கொடுமை

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவர் மிகவும் திறமைசாலியானவர். இருந்தாலும் அவரிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. அவ்வப்போது மது குடிப்பார்.

இருந்தாலும் நாளுக்கு நாள் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்து விட்டார். இது அனைவருக்கும் துன்பத்தை ஏற்படுத்தியது. ராஜாவே குடிக்க ஆரம்பித்து விட்டால், இராச்சியம் என்ன ஆவது?

ராஜாவின் குடிப்பழக்கம் ராணியின் மனதினுள் கஷ்டத்தை ஏற்படுத்தியது. என்ன செய்யலாமென ஒருநாள் பூராகவும் யோசித்தாள்.

அச்சமயத்தில் புத்திசாலியான அமைச்சர் ஒருவர் அரண்மனையிலே இருந்தார். அவரிடம் ராணி சென்று விடயத் தைச் சொன்னாள்.

"மன்னரை எப்படியாவது இந்த மதுப்பழக்கத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும், அதற்கு நீங்கள்தான் ஏதாவது உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

"சரி" என்று ராணியிடம் சொன்னார்.

அதன்பின் ஒருநாள் அந்த ராஜா இருந்த தனி அறையினுள் நுழைந்தார் அமைச்சர்.

அங்கே வைக்கப்பட்டிருந்த மது போத்தலை தன் மடியிலே மறைத்து கொண்டார்.

ராஜா தற்செயலாக இதைக் கவனித்து விட்டார். உடனே அமைச்சரை அருகில் அழைத்து "மடியிலே என்ன அது?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை" என்று அமைச்சர் மறைத்தார். "உண்மையைச் சொல், மடியிலே என்ன?" என்று மறுபடியும் ராஜா கேட்டார்.

"இது... இது... இது...வந்து... கிளி" என்றார் அமைச்சார்.

"என்ன உளர்றே? கிளியா அது?" என்று ராஜா கேட்டார்.

"இல்லை... இல்லை... இது குதிரை" என்று அமைச்சர் கூற ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது.

"இதோ பார்! செய்த குற்றத்தை ஒத்துக்கொள்! அதுதான் உனக்கு நல்லது, அதைவிடுத்து குதிரை–கழுதை என்று கதை சொல்லிக்கொண்டு இருக்காதே" என்றார்.

"மன்னா! நீங்கள் சொல்வதுதான் கரெக்ட்! என் மடியிலே இருப்பது கழுதைதான்" என்றார்.

மன்னனின் கோபம் மேலோங்கியது.

"இதோ பார்! உள்ளதை உள்ளபடி கூறினால் உயிரோடு விடுவேன், இல்லையேல்... உன் தலையை வெட்டும்படியாக உத்தரவு போடுவேன்" என்றார்.

அமைச்சர் உள்ளதைச் சொல்லி விட்டார். இப்போதும் சொல்கிறேன்... நான் சொன்னது எதுவுமே பொய் இல்லை" என்றார் அமைச்சர்.

ராஜா முறைத்தார். அமைச்சர் மெதுவாக அவரைப் பார்த்துச் சொன்னார், "மன்னா! முதலிலே ஒரு கிளாஸ் மது உள்ளே போனால் ஒன்றும் செய்யாது, அதைத்தான் "ஒன்றுமில்லை" என்றேன்.

இரண்டாவது கிளாஸ் மது உள்ளே போனதும் கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே திரும்பி சொல்லிக்கொண்டிருப்பார். அதனாலே "கிளி" என்று சொன்னேன்.

மூன்றாவது கிளாஸ் மது உள்ளே போனதும் குதிரை மாதிரி உறும ஆரம்பித்து விடுவான். நாலாவது கோப்பை மது உள்ளே போனதும் கழுதை மாதிரி கத்துவான்.

ஐந்தாவது மது கோப்பையின் போது மனிதன் மதுவாகவே மாறிவிடுவான்.

இவ்வாறு அமைச்சர் சாமர்த்தியமாக எடுத்துக் கூறியதைக் கேட்டதும் ராஜா மதுவின் அடிமையில் இருந்து மீண்டார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் I இற்கான விண்ணப்பங்கள் இலங்கை நூலக சங்கத்தினால் கோரப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

குறித்த கற்கைநெறி யாழ்ப்பாண நிலையத்தில் தமிழ்மொழி மூலம் நடைபெறவுள்ளதுடன் யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் 6 நிலையங்களில் நடத்தப்படவுள்ளது.

இக்கற்கைநெறிக்கான விண்ணப்ப தகைமைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அவற்றுள் இரண்டு திறமைச் சித்திகளை மொழி மற்றும் கணிதம், தூய கணிதத்தில் பெற்றிருப்பதுடன் ஆங்கிலத்திலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறிக்கான கட்டணம் 12 ஆயிரத்து 500 ரூபாவாகும். கற்கைநெறி தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக் கொள்வதற்கு 15 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுய முகவரி இடப்பட்ட 9"x4" அளவுடைய கடித உறையை Education officer, Srilanka Libary Association, 275/75 The Professional Centre, Stanley Wijesundera Mawatha, Colombo-07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதனுடன் இலங்கை நூலக சங்கத்தின் பெயரில் பெறப்பட்ட 200 ரூபா பெறுமதியானதும் ஹெறிங்டன் உப தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியதுமான காசுக்கட்டளையும் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக மேற்குறித்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அத்துடன் விண்ணப்பப்படிவங்களையும் கற்கைநெறி தொடர்பான விபரங்களையும் www.slla.org.lk என்ற இணைத்தள முகவரியூடாக பார்வையிட முடியும்.

இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் போது அத்துடன் விண்ணப்பித்ததற்கான காசுக் கட்டளையும் இணைத்து அனுப்ப வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சுனாமியில் பலியான மக்களுக்கு மௌன வணக்கம்

ஆழிப்பேரலைக்குப் பலியானோரை நினைவுகூரும் வகையில் நாளை புதன்கிழமை இரண்டு நிமிடநேர மௌன வணக்கம் செலுத்துமாறு அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆழிப்பேரலைக்கு பலியானவர்களை நினைவுகூரும் வகையில் நாளை புதன்கிழமை காலை 9.25 தொடக்கம் 9.27 மணி வரை மௌன வணக்கம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அனைத்து அரச துறை, தனியார் துறை நிறுவனங்களையும் இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் இலங்கையில் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காவு கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-100 | 140 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 300 | 200 |
| தக்காளி | 100 | 120 | 160 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 140 | 140 |
| பூசணி | 35 | 30 | 60 | 40 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 170 | 170 | 160 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 120 | 160 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 80 | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 110 | 140 | 140 |
| பீற்றூட் | -- | 100 | 160 | 120 |
| கறிமிளகாய் | -- | 160 | 200 | 200 |
| இராசவள்ளி | 170 | 140 | 160 | 150 |
| போஞ்சி | 100 | 80 | 100 | 90 |
| கத்தரிதம்புள்ள | -- | 120 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 7-8 | 10 | 30 | 25 |
| தேசிக்காய் | 50 | 90 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 40 | 30-35 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | 500 |

# இராசி பலன்

**25.12.2012**
**(மார்கழி 10, செவ்வாய்க்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு**
**துவாதசி முற்பகல் 9.57 மணிவரை**
**கார்த்திகை முன்னிரவு 10.44 மணிவரை**
**இராகுகாலம் 3.27-4.57 மணிவரை**
**சுபநேரம் 10.57-12.27 மணிவரை**
**கார்த்திகை விரதம், பிரதோச விரதம், நத்தார் பண்டிகை.**

**மேடம்** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வாக்கு மேன்மையுண்டு, பண வரவு திருப்தி தரும்.

**இடபம்** கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், போசன சுகமுண்டு, பயணங்கள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிங்கம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், செய்தொழிலில் அதிக பிரயாசை எடுப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** சொத்துக்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்** அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், மறதியால் சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கௌரவக் குறைவான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், உடன்பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** கடன் சுமைகள் குறையும் வாய்ப்புண்டு, புகழ் மிக்கவர்களின் மதிப்பு கிடைக்கும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், நீண்ட நாளைய கோரிக்கைகள் நிறைவேறும், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்** சுப தகவல்கள் வந்து சேரலாம், தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மீனம்** பெரிய மனிதர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், பண வரவு திருப்தி தரும்.

வளவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச.பொ.மே.சபையின் நிர்வாக தெரிவுகள்

வடமராட்சி சமூக பொருளாதார மேம்பாட்டுச் சபையின் உப விதி உருவாக்கமும் புதிய நிர்வாக தெரிவும் இடம்பெறவுள்ளது.

இதில் கலந்து கொண்டு அங்கத்தவர்களை தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு சமூக பொருளாதார மேம்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இலகடி பராசக்தி அம்மன் கோவிலடியில் இடம்பெறும் கூட்டத்திற்கு ஆதிய மலை, கோப்பு, தூப்புலம், நாவலடி, இலகடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, வெலியன் தோட்டம் ஆகிய பகுதிகளை சேர்ந்த அங்கத்தவர்கள் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு அண்ணா சிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத்தில் இடம்பெறும் கூட்டத்திற்கு இமையாணன், அண்ணாசிலையடி, வல்லியாவத்தை, செல்வாபுரம், முதலைக்குழி ,கரணவாய் தெற்கு, கரணவாய் மேற்கு ,பண்டாரத்தறை ஆகிய இடங்களை சேர்ந்தவர்களே கலந்து கொள்ளலாம். எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு அண்ணா சனசமூக நிலையதத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு கெருடாவில், கம்பர்மலை, தொண்டைமானாறு ஆகிய பகுதி அங்கத்தவர்களும் கலந்து கொள்ளலாம். எதிர்வரும் 30 ஆம் திகதியும் ஜனவரி 2 ,3ஆம் திகதிகளில் அல்வாய், மனோகரா முன்பள்ளி, கொற்றாவத்தை, வரணி ஆகிய இடங்களிலும் இக்கூட்டங்கள் இடம்பெறவுள்ளதென வடமாராட்சி சமூக பொருளாதார மேம்பாட்டு சபையின் செயலாளர் மா.அறிவழகன் தெரிவித்துள்ளார். (அ-3-24)



நன்றி: ஐலன்ட்

# அஞ்சலி செலுத்த இடையூறு விளைவிக்கும் தமிழர்கள்; தமிழர்களே அல்ல! - விந்தன்

(யாழ்ப்பாணம்)

இறந்துபோன உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தமிழர்கள் இடையூறாக இருப்பார்களாயின் அவர்கள் தமிழர்களாகவே இருக்க முடியாது என யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சியினர் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று பிற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல வாதப்பிரதிவாதங்களுக்கு பின்னர் கூட்டம் முடிவுறும் கட்டத்தில் யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் விந்தன் கனகரட்னத்திம் யாழ்.மாநகர சபையில் நடைபெற்ற ஒளிவிழாவிற்கு எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுக்கவில்லை என்றும் மேலும் அவ் ஒளிவிழாவில் யாழ்.மாநகர சபை முதல்வர், உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதனை யாரும் தடை போட முடியாது எனவும் அது எமது உரிமை எனவும் உரையொன்றினை நிகழ்த்தியிருந்தார் என தெரிவித்தார்.

இவ்விடயங்கள் தொடர்பில் தனது கேள்விகளை முன்வைத்த எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் அவ்வாறு அவர் உரையாற்றியமைக்கு காரணம் தனது சுயலாப அரசியலுக்காகவே எனவும் கூறினார்.

இதற்கு பதிலளித்த முதல்வர் தான் உறவுகள் எனக்குறிப்பிட்டது எமது அப்பா, அம்மாவை மற்றும் உறவினர்கள் என்போரை மட்டுமே. வேறு எதனையும் அல்ல என தான் ஆற்றிய உரைக்கு விளக்கம் கொடுத்தார்.

பின்னர் தனது வாதத்தினை தொடர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கடந்த 30 வருட காலத்திலும் அதற்கு முன்னரும் பல்லாயிரக்கணக்கான மக்களும் போராளிகளும் அரசியல் தலைவர்களும் கொல்லப்பட்டதோடு இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளனர். இதில் உயிரிழந்த இராணுவத்தினரை நினைவுகூருவதற்கு தென்பகுதியில் தடையில்லை. ஆனால், வடபகுதியில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு அனுமதியில்லை. இது எந்தவகையில் நியாயம் என வினா ஒன்றினை தொடுத்தார்.

இதற்கு பதிலளித்த முதல்வர் நினைவு கூருங்கள் உங்கள் அரசியல் கட்சி அலுவலகங்களில். ஆனால், கல்விக்கூடத்தினை அதற்காக பயன்படுத்தியது தவறு என தனது கருத்தினை தெரிவித்தார்.

இதற்கிடையில் குறுக்கிட்ட யாழ்.மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் சுபியான் தடை செய்யப்பட்ட இயக்கத்தினை நினைவு கூர முடியாது எனவும் அவ்வாறு நினைவு கூருபவர்கள் அரசியல் நோக்கம் கொண்டவர்கள் எனவும் மாணவர்களினை அதற்காக பயன்படுத்தியது தவறு எனவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன், அவ்வாறாயின் பல்கலைக்கழக மாணவர்களை இராணுவம் தாக்கியது சரியா? எனவும் விடுதிக்குள் இராணுவம் நுழைந்தது சரியா? எனவும் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். இதற்கு சற்று நேரம் பதலளிக்கத் தெரியாமல் தவித்த சுபியான் யாழ்.பல்கலையில் கலவரம் நடைபெற்றதனால் அவ்வாறு நடந்து விட்டதென்றும் தவறுகள் இடம்பெற்று இருந்தால் அதனை பொலிஸார் பார்த்துக் கொள்வார் என்றும் சமாளித்தார்.

இதனைக் கேட்டு ஆவேசமாக எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் பரஞ்சோதி யாழ். பல்கலையில் நடைபெற்றது கலவரமல்ல. இராணுவமே மாணவர்களினை காட்டுமிராண்டித்தனமாக தாக்கினர். எமது உறவுகளினை நினைவுகூர யாரும் தடை போட முடியாது என்றார்.

இதன்பின்னர் தொடர்ந்த எதிர்க்கட்சி தலைவர் விந்தன் கனகரத்தினம் உயிரிழந்த நமது உறவுகளை, போராளிகளை, அரசியல் தலைவர்களை நினைவுகூருவதற்கு தமிழர்கள் யாரும் தடையாக இருப்பார்களாயின் அவர்கள் உண்மையாகவே தமிழர்களாக இருக்க முடியாது என இடித்துரைத்தார்.

இவ்வாக்கு வாதத்தின் பின்னர் கூட்டம் வேறு திசைநோக்கி மெல்லச் சென்றது. (அ-4)

# சேவை நலன் பாராட்டு விழா

(நல்லூர்)

நீர்வேலி வடக்கு கிராம சேவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற சுபசீன் அல்பிரட்டின் சேவை நலன் பாராட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விழா குழு தலைவர் த.பரராசசிங்கம் தலைமையில் நீர்வேலி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், நீர்வேலி கலை பண்பாட்டு கழகத் தலைவர் இ.குணநாதன், நீர்வேலி மேற்கு கிராம சேவையாளர் சு.சண்முகவடிவேல், நீர்வேலி வடக்கு சமுர்த்தி அலுவலர் ப.சேவற்கொடியோன், நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் அதிபர் சி.தர்மரத்தினம், நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் வீ.கோபாலதாஸ், நீர்வேலி மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயகௌரி செந்தூரன் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டுரையை வழங்கவுள்ளனர். (அ-3-134)

# திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஏற்பாடு செய்யும் திருவாசக முற்றோதல் நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி காலை 7.30 மணி தொடக்கம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சைவ பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# யாழ்.போதனாவில் வைத்தியர்கள் ஒரு மணி நேர பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் இன்றிலிருந்து காலையில் மட்டும் ஒரு மணிநேர பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அப்பணிப் பகிஷ்கரிப்பு தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் காலவரையறையற்ற ரீதியில் தொடரும் எனவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர் பி.திருமாறன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரிகள் இன்னும் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை.

இதனைக் கண்டித்தும் பொலிஸாரின் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி குற்றவாளிகளை விரைவாகக் கைது செய்ய வேண்டும் எனக்கோரியும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள் எதிர்வரும் நாட்களில் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்வதாக நேற்றைய பொதுக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளனர்.

இன்று முதல் யாழ்.போதனா வைத்தியசாலைகள் காலை 8 மணி முதல் 9 மணி வரை கடமையிலிருந்து வெளிநடப்பு செய்ய உள்ளனர்.

எனினும் அவசர சிகிச்சைப்பிரிவு, புற்றுநோய்ப்பிரிவு, குழந்தை மருத்துவப்பிரிவு மற்றும் மகப்பேற்றுப்பிரிவு ஆகியன வழமைபோல் இயங்கும். மேலும் தனியார் மருத்துவமனைகளிலும் தனியார் சிகிச்சை நிலையங்களிலும் எதுவிதமான சிகிச்சைகளும் மேற்கொள்வதில்லை எனவும் வைத்தியர்கள் இக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

இவ்வாறு வைத்தியர் மீதான தாக்குதல்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வைத்திய நிபுணர், வைத்தியர் பற்றாக்குறையை மேலும் மோசமாக்குவதுடன் பொதுமக்களுக்கான சிகிச்சைகளை பாதிக்கும் என்பதால் இவ்வாறான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் எதிர்காலத்தில் இம் மோசமான சம்பவங்கள் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு பொலிஸாரினை வைத்தியர்கள் வேண்டுகின்றனர். (அ-4)




# சமதர்ம இயக்கத்தின் 77 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் இலங்கையில் சமதர்ம இயக்கத்தின் 77 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு சமதர்ம இயக்கமும் மீதிப்பாதையும் எனும் கருப்பொருளிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு டி.எம்.எஸ். (D.M.S) தனியார் கல்வி நிறுவனத்தில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-9)

# மகரஜோதி மண்டல பூஜை

அகில இலங்கை யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தானம் மகரஜோதி மண்டல பூஜை பெருவிழாவில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெய் நிரப்புதலும் நாளை புதன்கிழமை காலை நல்லூர் கந்தசாமி கோயில் நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் வைத்து சுவாமிமார்களுக்கு இருமுடி கட்டி யானை மீது ஐயப்பன் பவனிவர சுவாமிமார்களும் அடியார்களும் யாழ்ப்பாண ஆரியகுளம் சந்தி, கஸ்தூரியார் வீதி, பலாலி வீதி வழியாக யானை ஊர்வலத்துடன் ஆலயத்தை வந்தடைந்து மண்டலப் பூஜையும் படிப் பூஜையும் நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 5 மணிக்கு நெய்யபிஷேகம் நடைபெறுமென தேவஸ்தானம் அறிவித்துள்ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிதம்பர தரிசனம்

## தில்லைக் கூத்தனின் தரிசனம் கிடைத்து விடும்

காரூரும் சோலைகளும் கவினூறும் காட்சிகளும்
நீரூறும் குளமும் நிதமுயரும் புதுவாழ்வும்
ஆறூரும் பேரழகும் அகங்க வர மிக்குயர்ந்த
தேரூரும் அகலத் தெருக்கள் நிறைந்திருக்கும்
பேரூராம் காரைத்திருவூரில் அருளும் சுந்தரனை
பேறாய் தரிசிக்க பேரின்பம் பெருகி வரும்
தீராத் துயர் யாவும் யாவர்க்கும் தீர்ந்து விடும்
தில்லையிலாடும் கூத்தனவன் தரிசனம் கிடைத்துவிடும்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

**ஈழத்து சிதம்பரத்தில் இன்று (25.12.2012 )**
**செவ்வாய்க்கிழமை 07 ஆம் நாள் உற்சவம்**






மலரும் 2013 ஆம் ஆண்டில் அனைவரும் நலம்பெற வாழ்த்துகின்றோம்.

ஆயுர்வேத மருந்துச் சரக்குகள்,
ஆலய அபிஷேகத் திரவியங்கள்,
சகலவிதமான கிரியைப் பொருட்கள்
மகப்பேற்று நாட்சரக்குகள்,
ஆலய தீப ஆராதனைப் பொருள்கள்,
கிரந்தி எண்ணெய், சகலவிதமான
எண்ணெய் வகைகளும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

**நாதன்ஸ்**
**ஆயுர்வேத மருந்துக்கடை**
இல.5 கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
தொ.பே: 0770666024

(சி-1894)



**நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்**

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....

| கட்டணங்கள் | [1Kg] இற்கு |
|---|---|
| லண்டன் | 1500/- |
| கனடா | 2600/- |
| சுவிஸ் | 1200/- |
| அவுஸ்திரேலியா | 1000/- |
| ஜேர்மனி | 1000/- |



சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/- லண்டன் 600/-
(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்
லண்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
**500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!**
**3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.**

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210
வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044 (சி-1818)

மேலதிக தொடர்புகளுக்கு:
**Rain Bow Travels**
இல.30/2, 3 ஆம் ஒழுங்கை.
மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம். 0212219596


# இன மதவாதம் தலைதூக்க அனுமதிக்கக் கூடாது- ஜே.வி.பி.

(கொழும்பு)

இனவாதம் மற்றும் மதவாதம் தலைதூக்க இடமளிக்கப்படக் கூடாதென ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் மீண்டும் இனவாதம் மற்றும் மதவாதம் தலைதூக்க இடமளிக்கப்படக் கூடாது. மக்கள் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு ஓர் நிலைமையில் இன அல்லது மத முரண்பாடுகள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இனவாதம் காரணமாக ஏற்பட்ட போரினால் மிகக் கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டன. போர் நிறைவடைந்து சில காலங்களுக்குள்ளேயே மீளவும் முரண்பாடுகள் வெடித்தால் அது பல்வேறு ஆபத்துக்களை ஏற்படுத்தும். எனவே எந்தவொரு மத அல்லது இனவாத சக்திகளும் தலைதூக்க இடமளிக்கக் கூடாது. இதற்கு நாட்டின் சகல மக்களினதும் ஒத்துழைப்பு அவசியமானது என ஜே.வி.பி. ஊடக அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

## விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டுக்கு பிரதமர் விஜயம்

பிரதமர் டி.எம். ஜயரத்ன ஐ.தே.க.வின் பாராளுமன்ற அங்கத்தவரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான விஜயதாச ராஜபக்ஷவின் நுகேகொடையிலுள்ள வீட்டிற்குச் சென்று நேற்றையதினம் சுகநலம் விசாரித்தறிந்தார்.

துப்பாக்கிச் சூட்டினால் சேதமடைந்த அவரது வீட்டைப் பார்வையிட்ட சென்ற பிரதமர் விஜயதாச ராஜபக்ஷவின் மனைவி மாலா விஜயதாச மற்றும் மகன் ஆகியோர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் நியாயமான விசாரணை இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார். (அ-2)


**வீடு வாடகைக்கு**

முல்லைத்தீவு பட்டணத்தில் 1/2 மைல் சுற்றாடலில் கச்சேரி, ஆஸ்பத்திரி, ஆலயங்கள், அரசாங்க காரியாலயங்கள் அருகாமையில் 1500 சதுர அடி பரப்பளவு கொண்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு. Lodge ஆகவோ நிறுவனமாகவோ உபயோகிக்கலாம்.
தொடர்பு: த.ஶ்ரீ. இளஞ்சிங்கநாதன்
வற்றாப்பளை, முள்ளியவளை.
தொ.பே: 0779268455



**2013 இற்கான புதிய அனுமதிகள்**

**BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை**

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:
- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம் 84, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | நீர்வேலி |
| கோப்பாய் | சாவகச்சேரி — சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை |
| மானிப்பாய் 1 | அச்சுவேலி — ஆதார வைத்தியசாலை அருகாமை |
| மானிப்பாய் 2 — சங்கரப்பிள்ளை வீதி | சங்கானை — பிரதேச செயலகம் அருகாமை |
| கன்னாகம் — Dr. சுபாரத்தினம் வீதி கன்னாகம் | வடமராட்சி |

**சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்**

| | |
|---|---|
| Certificate in English | இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு |
| Diploma in English | G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு |
| ESOL A1, A2 | Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு |
| IELTS | உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும் |

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

(சி/1803)

**BRITISH BUSINESS COLLEGE**
64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055
British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.
Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718



புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் பிரமாண்டமான மலிவு விற்பனை

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவருக்குமான
அனைத்து விதமான ஆடைகள்
**புதிய தெரிவில்**

**15-12-2012 முதல் 31-12-2012 வரை**
காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

# சரவணா ரெக்ஸ்

3000/= க்கு மேல் கொள்வனவு செய்யும்
3 அதிஷ்டசாலிகளுக்குப் பெறுமதியான பரிசில்கள்




யார் அந்த 3 அதிஷ்ட சாலிகள்




அதிஷ்டம் பார்க்கப்படும்.
வாடிக்கையாளர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்

உயர்தரமான ஆடைகளும் குறைந்த விலையும் அதுதான் சரவணா ரெக்ஸ்

டிசம்பர் 31 வரை மட்டுமே இச்சலுகை

Office wear Silk Saree 500/-
Office wear Cottan Saree 500/-
Shirt 500/-

இடம்: வாரத்தில் 7 நாட்களும் வியாபாரம் நடைபெறும்
**சரவணா களஞ்சியசாலை**
ஸ்ரீபிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (கெங்காதரன் வைத்தியசாலைக்கு அருகாமை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் பிறப்பில் கிறிஸ்துவாக மாறுவோம்

இறைவன், தூய, திரித்துவம் என்னும் இம் மூன்று பேரும் ஒரே இறைவன் மூவொரு இறைவன் என்றும் எமக்கு கத்தோலிக்க திருச்சபை படிப்பிக்கின்றது. பாவத்தில் வீழ்ந்த மனிதனுக்கு மீட்பு என்பது அவசியமாகியது. எனவே, இம்மீட்பு முழுமையாக இயேசுக் கிறிஸ்துவிலே வெளிப்பட்டுள்ளது. மனிதர் அனைவரின் மீட்புக்காகத்தான் இறைவன் தாமே மனிதவதாரம் எடுத்தார் என்பது சிலருக்கு புரியாத புதிராகத் தோன்றலாம்.

இறைவாக்கினர் எசாயா வாயிலாக ஆண்டவர் தம் மக்களுக்கு அளித்த வாக்குறு




தியை நிறைவேற்றினார். என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன். நான் உன் மேல் அன்பு கூர்கின்றேன். (எசா 43:4) இறைவன் தன்னை விட தனது படைப்பான மனிதனை நேசித்தார். அதனால்தான் இறைவனான அவர் பாவத்தில் வீழ்ந்த மனிதனை மீட்க மனிதவதாரம் எடுத்தார். மனிதவதாரத்தின் மூலம் மக்களோடு தன்னைப் பகிர்ந்து கொண்ட விழாதான் கிறிஸ்மஸ். இறை அன்பு மனிதனைத் தேடி மண்ணிற்கு வந்தது.

அதாவது விண்ணகம் மண்ணிற்கு வந்த நன்நாள். ஆனால், மனிதன் இறைவனை மறந்து தான் போன போக்கில் வாழுகின்றான். மனிதன் இறைவனை மறந்தாலும் இறை அன்பு ஒருபோதும் வற்றிப் போவதில்லை. அவர் எம்மை மறப்பதுமில்லை. அவர் எம்மை அன்பு செய்யாமல் இருந்ததுமில்லை. நீ என் அன்புக் குழந்தையல்லவா? உனக்காக என் இதயம் ஏங்கித் தவிக்கின்றது என்கின்றார் ஆண்டவர் (எரே 31:20). இதுவே நிபந்தனையற்ற நிலையான அன்பு மனிதனை மீட்க மனிதவதாரம் எடுத்த அன்பு.

முதன்முதலில் இறைமகன் கிறிஸ்துவின் பிறப்பினை வான தூதர் இடையருக்கு அறிவித்ததுதான் நற்செய்தி அறிவிப்பாகும். **ஆண்டவரின் மாட்சி அவர்களைச்சுற்றி ஒளிர்ந்தது. (லூக் 2:9) எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று கூறினார்.** இதுதான் மீட்பின் செய்தி வானதூதர் அறிவித்த இச் செய்தியை இடையரும் அறிவித்தனர்.

உண்மையை அறிந்தவர்கள் அதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். உண்மை எது? இறைவன் அன்பானவர் என்பதே உண்மை. இறைவன் இந்நற்செய்தியை உலகிற்கு அளிக்க சாதாரண ஏழை இடையர்களைத் தேர்ந்தெடுத்தார். இவர்களே முதன் முதலில் கிறிஸ்துவை கண்டார்கள். சாதாரணமானவர்களே காணவேண்டும் என்பதே இறைவனின் திருவுளமாகவும் இருந்தது.

கீழை ஞானிகள் வானில் தோன்றிய விண்மீனின் வழியில் சென்று அரசர்க்கெல்லாம் அரசரான யேசுவை பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்து தெண்டனிட்டு வணங்கினர். ஆனால், ஏரோது மன்னன் மீட்பரின் பிறப்பால் கலங்கினான்.ஜெருசலேம் முழுவதும் கலங்குகிறது.

இதனால் பெத்தலகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் ஆட்களை அனுப்பி இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண்குழந்தைகளையும் கொன்றான். அதிகாரத்தின் அசுரத்தனத்தினால் மாசுமறுவற்ற மழலைகள் துடிதுடித்துக் கொல்லப்பட்டனர். அதிகார வெறிக்கும் ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்திற்கும் அநியாயமாக குழந்தைகள் கொன்று குவிக்கப்பட்டனர். இவர்களே கத்தோலிக்க திருச்சபையால் அழைக்கப்படும் மாசில்லா குழந்தைகள் அன்று ஏரோது அரசனால் நடத்தி முடிக்கப்பட்டவை இன்றும் தொடர்ந்து கொண்டுதான் செல்கின்றது. கயவரால், காமவெறியர்களால் கசக்கி எறியப்படுகிறார்கள். கருவறையில் புதைக்கப்படுகிறார்கள் என்றால் இன்னும் ஏரோதுக்கள் வாழுகின்றார்கள் என்பதையே சுட்டி நிற்கின்றது. சாதாரண ஏழை இடையருக்கும் ஞானிகளுக்கும் கிறிஸ்துவின் பிறப்புமகிழ்ச்சியூட்டும்நற்செய்தியாக இருக்க ஏரோதிற்கு பெரும் துயரச் செய்தியாக இருந்தது.

இறைவனின் வார்த்தையாம் யேசு மனிதனாகப் பிறந்ததை புனித யோவான் நற்செய்தியாளர்வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார் (யோவா1:14) என்று கூறியுள்ளார்.

உலகம் தோன்றுவதற்கு முன்னே தந்தையாம் இறைவனோடு நெருங்கிய உறவு கொண்டிருந்த இறைமகன் யேசு காலம் நிறைவேறிய போது மனிதனாக அவதாரம் எடுத்தார்.நமது தேவைகளில் ஆண்டவர் எப்போதும் எம்மோடு இருக்கிறார். ஆண்டவர் மனிதனாகப் பிறந்ததால் மனித மாண்பு உயர்வடைந்தது.



மனிதர் அனைவரும் மகிழ்ச்சியையும் அமைதியையும் விரும்புகின்றனர்.மீட்பரின் பிறப்பு எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி என்று வானதூதர் அறிவிக்கின்றார் (லூக் 2: 10) இருளில் அடிமையாக வாழ்ந்திருந்த எம்மை யேசு மீட்டு இறைமக்களாக்கினார். விண்ணக வாழ்விற்கு உரிமையாக்கினார். இதைவிட மகிழ்ச்சிதரும் நற்செய்தி ஏதும் உண்டா? வானதூதரின் செய்தியைக் கேட்டவர்கள் இயேசுவைக் காண விரைந்து சென்றனர் கண்டனர். தமது அனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொண்டனர். இறைவனைக் கண்டடைந்தவர் அவ் அனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியாது. பகிர்வதன் ஊடாகத் தான் உண்மையான மகிழ்ச்சியையும் மன நிறைவையும் அடைய முடியும்.மீட்பரின் இறையனுபவத்தை இல்லாதவர்களுடன் கைவிடப்பட்டவர்களுடன். தனித்திருப்பவர்களுடன் நோய்வாய்ப்பட்டவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போது தான் கிறிஸ்மஸ் அர்த்தமுள்ளதாக அமைய முடியும்.

புனித பிரான்சிஸ் அசிசியாரின் காலம் முதல் கிறிஸ்மஸ் விழாவின் போது குடில் கட்டுவது வழக்கமாக உள்ளது. இது இயேசு ஏழையிலும் ஏழையாகவே பிறந்தார் என்பதை சுட்டி நிற்கின்றது. நாமும் குடிலில் பிறந்த யேசுவைக் காண ஏழைஎளியவர்களுடன் பகிர்ந்து வாழ்வோம். வீணான ஆடம்பரங்களிலும் அலங்கரிப்புக்களிலும் எமது பணத்தினை செலவு செய்வதை விட்டு இல்லாதவருடன் பகிர்ந்து வாழ்வதில் இன்பம் அடைவோம். இறைமகன் இயேசுவை காண்போம்.

அப்போதுதான் கிறிஸ்துவின் அமைதி ஏழைகளின் குடில்களில் மட்டுமல்ல எமது குடில்களிலும் பிறக்க முடியும். இல்லையேல் ஆங்கிலேய கவிஞரான அலெக்சாண்டர் போப் கூறியது போல் கிறிஸ்து ஆயிரம் கிறிஸ்மஸ் குடில்களில் ஆயிரம் முறை பிறந்தாலும் என்னிடம் பிறக்கவில்லையென்றால் எனக்கு எப்பயனும் அல்லை என்பது போல அர்த்தமில்லாத ஓர் கிறிஸ்மஸ் ஆக அமைந்து விடும். எனவே, கிறிஸ்துவின் அமைதியை உருவாக்கும் அமைதியின் கருவியாக மாறுவோம்.

*உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக (லூக் 2:14)*

செல்வி. மே.ம.பெர்னாண்டோ
யாழ்ப்பாணம்.

# அமைதிச் சூழலை தக்கவையுங்கள்

## வாழ்வை மேம்படுத்த இதுவே வழி—சந்திரகுமார் எம்.பி.

அமைதிச் சூழலை தக்கவைத்துக் கொள்வதனூடாகவே மக்களின் வாழ்வை மேம்பாடடையச் செய்யலாம் என பாராளுமன்ற உறுப்பினரும் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழான உதவிகளையும் பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் யுத்த பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக அரசு பல்வேறு திட்டங்களினூடாக தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றது. இதன்மூலம் மக்கள் தமது வாழ்வாதாரத்தை நகர்த்தி வருகின்றனர்.

அத்தோடு பிரதேசங்கள் அனைத்தும் துரிகதியில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதோடு உட்கட்டுமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் யுத்த காலத்திலிருந்த நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்ட முன்னேற்றகரமான சூழலை இன்று எமது பிரதேசங்கள் எட்டியுள்ளன. இச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு தென்பகுதியின் அபிவிருத்தியுடன் சமநிலைப்பட்ட மேம்பாட்டை எட்டுவதற்கு நாம் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றோம். இதேவேளை, யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்பியுள்ளனர். உயிரிழப்புக்களும் உயிர் அச்சுறுத்தல்களும் இன்றி மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் யாழ். மாவட்டத்தில் பல தசாப்தங்களுக்கு முன் தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேறிய மக்கள் தற்போது மீள் குடியேறி வருகின்றனர்.

எனவே இவ்வாறான சூழலைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும் எனஅவர் தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சுமார் 18 கடற்றொழிலாளர்களுக்கு தலா 7 ஆயிரத்து 650 ரூபா பெறுமதியான கருவாடு பதனிடும் உபகரணங்களும் 100 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக தலா 6 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கோழிக் கூடுகளும் வழங்கப்பட்டன. (அ-2)

## விபத்தில் படுகாயம்

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இவ் விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். ஆஸ்பத் திரி வீதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தினால் ஒரு மோட்டார் சைக்கிள் மிகவும் சேதத்திற்கு உள்ளாகியதோடு அப்பகுதியில் போக்குவரத்து நெரிசலும் காணப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ். போக்குவரத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டதோடு அதிகரித்த வேகமே இதற்கு காரணம் என தெரிவித்தார். (அ-4)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5' 6''<br>கி.பா: 44.25<br>தொழில்/ தகைமை: Business Management (BBM online) NAC Assistant National online (வங்கி, திறந்த பல்கலைக்கழகம்)<br>தொ. இல: B -845 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 2<br>உயரம்: 5'2''<br>கி.பா: 27.25<br>தொழில்/ தகைமை:BA (வெளிவாரி) Diploma in Computer (விவாகரத்து பெற்றவர்)<br>தொ. இல: G -830 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>உயரம்: 5'11'<br>கி.பா: 5.5<br>தொழில்/ தகைமை: Computer Engineer (சுவீடன் PR )<br>தொ. இல: B -846 | பிறப்பு: 1991 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5' 5''<br>கி.பா: 44.25, 2இல் செவ்<br>தகைமை: O/L<br>தொ. இல: G -853 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>உயரம்: 5' 7''<br>கி.பா: 12 இல் செவ்<br>தொழில்/ தகைமை:நுண்கலைப் பீடம் (MVA), விரிவுரையாளர் (அரச உயர் பதவி)<br>தொ. இல: B -847 | பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>உயரம்: 5' 3''<br>கி.பா: 47.25<br>தொழில்/ தகைமை: BA, HNDA Dip in Edu. ஆசிரியை<br>தொ. இல: G -854 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:திருவோணம் 3<br>கி.பா: 24.25<br>உயரம்: 5'11''<br>தொழில்/ தகைமை: BSc, (Bco) (UK PR) , IT Consultant (தனியார்)<br>தொ. இல: B -850 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'<br>கி.பா: 39.25, 7 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: O/L, தையல்<br>தொ. இல: G -856 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையுடனான மோதலால் நாடு அதள பாதாளத்துள் வீழும்

## சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி எதிர்வுகூறல்

நாடாளுமன்றம் நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையில் அநாவசியமான மோதல்கள் காரணமாக நாடு அதள பாதாளத்திற்குள் வீழும் என்பதால் இதற்கு தீர்வொன்றை காணவேண்டும் என்றால் அனைத்து தரப்பினரும் ஒன்று இரண்டு அடிகளை பின்நோக்கி வைக்க வேண்டும் என நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள நிலைமையில் யார் தவறு செய்யவில்லை. யார் தவறு செய்தனர் என்பதை கூறமுடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஹொரணையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாடு, நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திப்பார்களேயானால் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களேயானால் இவ்வாறு தமது அடிகளை பின்நோக்கி வைக்கும் இயலுமை இருக்க வேண்டும். வீதிகள், பாலங்கள் நிர்மாணிக்கப்படுவது நாட்டின் அபிவிருத்தியின் ஒரு பகுதி மாத்திரமே. இவற்றுடன் மக்கள் ஆத்ம கௌரவத்துடன் வாழக்கூடிய சமூக சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்றால் பொறுப்பு கூற வேண்டிய அனைத்து துறைகளும் இது குறித்து ஆழமாக சிந்தித்து பார்க்க வேண்டும்.

தற்போது நாட்டில் காணப்படும் நிலைமைகளானது எந்த வகையிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிலைமைகள் அல்ல. நாட்டின் நிர்வாக அதிகாரமானது நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், நீதிமன்றம் ஆகிய 3 அதிகார தூண்களிடம் உள்ளன. அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த மூன்று நிறுவனங்களின் செயற்பாடுகள் சரிசமமான வகையில் இருக்க வேண்டும். அப்படியில்லை என்றால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும்.

அதனால் ஏற்படும் பாதகங்களை சமூகமே அனுபவிக்க நேரிடும். தற்போது ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினையால் நாடு மீண்டும் பின்நோக்கியே செல்லும் தற்போதுள்ள நிலைமையில் யார்சரி யார் தவறு என்று கூற முடியாது. எனினும் இந்த தேவையற்ற பிரச்சினை காரணமாக நாடு அதள பாதாளத்திற்குள் வீழும் என்று மாத்திரம் தெரிகிறது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பரீட்சை வினாத்தாள் கசிவு; சந்தேகத்தில் இருவர் கைது

பரீட்சை வினாத்தாள் கசிவு தொடர்பில் பரீட்சை திணைக்கள அதிகாரிகளிடம் புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர். இலங்கை பரீட்சை திணைக்களத்தில் கடமையாற்றிய மூன்று அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையின் விஞ்ஞானம் பகுதி ஒன்று வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கம்பஹா பிரதேச பிரபல தனியார் வகுப்பு ஆசிரியர் சம்பத் அத்தட்டகே மற்றும் சக ஆசிரியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த இருவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கடுவல நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பரீட்சை வினாத்தாள் அச்சிடப்பட்ட அச்சகத்தை புலனாய்வு பிரிவினர் பார்வையிட்டுள்ளனர். இதேவேளை பரீட்சை வினாத்தாள் கசிவுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் பரீட்சைத்திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பரீட்சை வினாத்தாள் கசிவு தொடர்பில் பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கையடக்கத்தொலைபேசி ஒன்றினுள் வினாத்தாள்களை மறைத்து வைத்து வெளியே கொண்டு வந்ததாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பரீட்சை வினாத்தாள்கள் சுமார் மூன்று இலட்சம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கணிதம், வரலாறு போன்ற பாட வினாத்தாள்களும் கசிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. (அ-2)

# ஆலோசகர்கள் ஜனாதிபதியை பிழையாக வழி நடத்துகின்றனர்

## ஜனநாயக மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

ஆலோசகர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிழையாக வழிநடத்தி வருவதாக ஜனநாயக மக்கள் முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது. வட மாகாண நிலைமைகள் தொடர்பில் ஆலோசகர்களின் கருத்துக்கு ஜனாதிபதி செவிமடுத்து வருவதாகவும் துரதிஷ்டவசமாக அந்த ஆலோசனைகள் ஆரோக்கியமானவை அல்ல எனவும் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுபவம் மிக்க ஓர் அரசியல்வாதி. இனவாத ஆலோசகர்களின் கருத்துகளுக்கு செவி சாய்க்கக் கூடாது எனவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் துணைத்தலைவர் குமாரகுருபரன் தெரிவித்துள்ளார். வடக்கில் பதற்ற நிலைமை நீடித்தால் அரசியல் தீர்வு காணமுடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர்களான டியூ.குணசேகர, திஸ்ஸ விதாரண, டலஸ் அழகப்பெரும, ராஜித சேனாரட்ன, வாசுதேவ நாணயக்கார ஆகிய சிலரே இன ஐக்கியம் பற்றி வலியுறுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு இன ஐக்கியத்தை வலியுறுத்தும் அமைச்சர்களின் கருத்துகளுக்கு ஜனாதிபதி செவிமடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடமாகாணத்தில் எந்தவொரு பயங்கரவாத சம்பவமும் இடம்பெறாத நிலையில் பல்கலைக்கழக மாணவர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைத்தமை சட்டவிரோதமானது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மக்களுக்கு உலருணவு

(சிவநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிளி. மாவட்ட மீள்எழுச்சி திட்டத்தினரால் உலருணவுகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராமங்களின் வாழ்வு எழுச்சி சிறுகுழுக்கள் மூலமாக அரிசி, பருப்பு போன்ற உலருணவு பொருட்கள் சேகரிக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு வழங்கப்படவுள்ளது. (அ-3-254)

# பனிச்சங்கேணி பாலம் உடைந்தது; மட்டு., திருமலை போ.வ. தடைப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்ளப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தால் இரண்டாவது தடவையாக பனிச்சங்கேணி பாலம் உடைக்கப்பட்டு அதில் ஏழு அடி நீர் மேலெழுந்துள்ள வண்ணம் செல்வதால் மட்டக்களப்பு, திருமலை பாதை துண்டிக்கப்பட்டதுடன் வாகரை பிரதேசத்துக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் பொலநறுவை பராக்கிரமபாகு சமுத்திரத்தில் 12 அடி வான்கதவு திறக்கப்பட்டமையாகும். இதனால் வாகரைப் பிரதேசத்தின் கதிரவெளி, புச்சாக்கேணி, அம்பந்தனாவெளி, பால்சேனை, வம்மிவட்டவான், புளியங்கண்டலடி, கண்டலடி, வாகரை மத்தி, தட்டுமுனை, ஊரியன்கட்டு, அழகாபுரி உட்பட பல கிராமங்கள் நீரில் மூழ்கின.

இதனால் தற்போது வாகரைப் பிரதேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இடைத்தங்கல் முகாம்களில் மக்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை தலைவருமான சீ.யோகேஸ்வரன் மரக்கறி உட்பட்ட உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், படுக்கை விரிப்பு, அத்தியாவசிய பொருட்களுடன் படகு மூலம் வெள்ளத்தின்பின் இரண்டாவது தடவையாக வாகரை பிரதேசத்துக்கு விஜயம் செய்தார்.

அங்கு சென்று சகல கிராமங்களையும் இடைத்தங்கல் முகாம்களையும் பார்வையிட்டதுடன் மக்களுக்கு தேவையான அவசிய பொருட்கள் சிறுவர்களுக்கான உணவுப் பொருட்கள், சிறுவர்களுக்கான நுளம்புவலைகள், மருந்துப் பொருட்கள் மற்றும் அவசிய பொருட்களை வழங்கி வைத்தார். (அ-2)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவலி- கபாலக்குத்து

தலை இடி என்பது சாதாரண நோய் அல்ல. தலையிடிக்கு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக தலையிடி தலையின் எந்தப் பக்கத்தில் அதிகமாக தெரிகிறது. ஒரு பக்கத்தில் மாத்திரம் இடிக்குமா? அல்லது இரு பக்கங்களிலும் தலையிடி வருமா? அல்லது



மாறிமாறி வருமா? அல்லது சத்தியும் சேர்ந்து வருமா? அல்லது சத்தி எடுத்தவுடன் தலையிடி தணியுமா? எப்படிப்பட்ட தருணங்களில் அல்லது எந்த நேரங்களில் தலையிடி அதிகம் வரும்? போன்ற தகவல்கள் மிக முக்கியமானவை. கண் இருட்டி வந்து அது குறையும் போது தலைவலி ஆரம்பிப்பது பெரும்பாலும் ஒரு பக்கத் தலைவலி என்றும் கபாலக்குத்து எனவும் பொதுவாகச் சொல்லப்படும். இது மைக்ரைன் தலைவலியின் அறிகுறியாகும்.

### ஆரம்ப அறிகுறிகள்

மைக்ரைன் தலைவலி பெரும்பாலும் ஒரு பக்கத் தலைவலியாக இருந்தாலும் இரு பக்கங்களிலுமோ மாறிமாறியோ வரக்கூடும். குமட்டல், வாந்தி போன்றவையும் இணைந்து வரலாம். கண்களில் கரும்புள்ளிகள் விழுவது போலவோ திரைபோலவோ இருட்டிக் கொண்டோ தலைவலி ஆரம்பிக்கக்கூடும். தலைவலியின் ஆரம்பத்தில் மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டம் குறைவதாலேயே இத்தகைய பார்வைக் கோளாறுகள் தோன்றுகின்றன.

கோடுகள் தெரிவது போலவும் நிற வெளிச்சங்கள் பிரகாசிப்பது போலவும் சிலருக்கு தோன்றுவதுண்டு.

### காரணங்கள்

மைக்ரைன் தலைவலி பெரும்பாலும் பெண்களையே அதிகம் தாக்குகிறது. அத்துடன் இந்நோயால் பாதிக்கப்படுபவர்களில் பாதிப்பேருக்கு நெருங்கிய உறவினர் யாராவது இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். எனவே, இதை ஓரளவு பரம்பரை நோய் என்று சொல்லலாம். உங்கள் உறவினர் யாருக்காவது இந்நோய் இருக்கிறதா? என ஆராய்ந்து பார்ப்பதே சிறந்தது.

சில உணவு வகைகள் இத் தலையிடி வருவதை தூண்டக்கூடும். சொக்கிளேட், சீஸ், மதுபானம் போன்றவை அத்தகையவை. ஏதாவது குறிப்பிட்ட உணவை உட்கொண்ட பின் இத் தலைவலி வருகிறதா? என்பதை அவதானித்துப் பாருங்கள். ஏதாவதொரு உணவிற்குத்தான் மைக்ரைன் வருகிறது என தெரிந்தால் அதனை தவிர்ப்பதுதான் ஒரே வழி.

கருத்தடை மாத்திரைகளை உட்கொள்பவர்களுக்கும் இது வருவதுண்டு. அதேபோல் வேறு சிலருக்கு மாதவிடாய்க்கு முந்திய நாட்களிலும் வருவதுண்டு. மனப்பளு, மனப்பதற்றம் போன்ற உணர்ச்சி நிலைகளும் மைக்ரைன் தலைவலியை தூண்டக்கூடும்.

மைக்ரைன் தலைவலி பெரும்பாலும் விடலைப் பருவத்தில் ஆரம்பித்து நடுத்தர வயதை அடையும் போது நின்று விடும்.

### சிகிச்சை

தலையிடி ஆரம்பிக்கும் தருணத்தில் அஸ்பிரின், பரசிட்டமோல், இபுபுருவன் போன்ற மாத்திரைகளை உங்கள் வைத்தியர்கள் கூறும் அளவில் உபயோகித்தால் தலையிடி தணியக் கூடும். வாந்தியும் சேர்ந்து வருபவர்களுக்கு **Metoclopramide** அல்லது **Prochloperazine** போன்ற மருந்துகள் உதவக்கூடும். **Ergotamine Tartrate** என்ற மருந்தை கண் இருட்டிக்கொண்டு வரும் நேரத்தில் நாக்கின் கீழ் வைத்து கரைய விட்டால் வலி வராது. வந்தாலும் கடுமையாக இருக்காது.

ஆயினும் இந்த மருந்தை நீங்களாக பாவிக்கக்கூடும். வைத்தியரின் கண்காணிப்பின் கீழ்த்தான் உபயோகிக்க வேண்டும்.

**Sumatripton** என்ற புதிய மருந்தும் நல்ல பலன்களை கொடுக்கிறது. சுமற்ரிப்ரான் தலையிடி வரும்போது உபயோகிக்கப்படுவது. ஆரம்பிக்கும்போது மட்டுமல்ல ஆரம்பித்த பின் உபயோகித்தாலும் தலையிடியை நிறுத்தும். ஒரு தடவை வந்த தலையிடிக்கு ஒரு தடவை மாத்திரம் உபயோகிக்கலாம். குறையவில்லையெனில் மீண்டும் உபயோகிக்கக்கூடாது.

மேற்கூறிய மருந்துகள் தலையிடி வரும் நேரத்தில் மட்டுமே உபயோகிக்கக்கூடியவை. ஆயினும் உங்களுக்கு தலையிடி அடிக்கடி வந்தால் உதாரணமாக வாரம் ஒருமுறை வந்து உங்கள் நாளாந்த கடமைகளை பாதிக்கிறதே எனின் நீங்கள் தலையிடி வராமல் தடுப்பதற்கான வேறு ஏதாவது ஒரு மருந்தை தினமும் பாவிப்பது பொருத்தமாக இருக்கும். உதாரணமாக **Propranol, Pizotifen, Flunarazine , Amitriptyline** போன்ற ஒரு மருந்தை நல்ல வைத்தியரின் ஆலோசனையுடன் உபயோகித்து வாருங்கள்.

புளுனரசின் என்ற மருந்து தலையிடி வருவதை தடுக்க உபயோகிக்கப்படுகிறது. சிபிலியன் (Sibelium) புளுனரி (Flunarin) ஆகிய பெயர்களில் கிடைக்கின்றது. தினமும் இரவில் 10 மில்லி கிராம் உபயோகிக்க வேண்டும். தலையிடி வருவது நின்று விட்டால் வாரத்திற்கு ஐந்து நாட்கள் மட்டும் உபயோகித்தால் போதுமானது. தொடர்ந்து ஆறு மாதங்கள் உபயோகிக்க வேண்டியிருக்கும்.


டாக்டர் எம்.கே.முருகானந்தன்
M.B.B.S.(Cey); D.F.M. (S.L); MCGP(S.L)
குடும்ப வைத்திய நிபுணர்





# குழிக்குள் விழுத்த ஷிராணியையும் இழுக்கிறார் சரத்பொன்சேகா

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டாம் என யாராலும் கூறமுடியாது. முக்கியமான கட்டங்களில் அமைச்சரவை தீர்மானித்தால் நாடாளுமன்றம் உடனடியாக கூட்டப்படும். உலகமே அழிந்திருந்தாலும் நாடாளுமன்ற கூட்டத்தையே முதலில் நடத்தியிருப்போம் என்று அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் கேள்விகளைக் கேட்டனர்.

குற்றப் பிரேரணையை அடுத்து தோற்றியுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் அடுத்த கூட்டத் தொடரை ஒத்தி வைக்க வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளமை தொடர்பில் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், சட்டத்தை நாடாளுமன்றமே இயற்றுகின்றது. அவற்றில் திருத்தங்களையும் செய்கின்றது. இவ்வாறான நிலையில் நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டாம் என யாராலும் கூற முடியாது என்றும் அந்த அமைச்சர் தெரிவித்தார்.

எந்த ஒரு பிரச்சினை ஏற்பட்டாலும் நீதிமன்றங்களோ அல்லது வேறு எந்த நிறுவனங்களோ கூடி முடிவெடுக்காது. நாடாளுமன்றமே முதன்முதலில் கூட்டப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானங்கள் எட்டப்படும்.

திஸ்ஸ விதாரண அமைச்சரின் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்காக நாடாளுமன்றத்தை கூட்டாமல் விட முடியாது. அமைச்சரவை தீர்மானித்தால் நாடாளுமன்றத்தை எப்போது வேண்டுமானாலும் கூட்டலாம். குற்றப் பிரேரணையை விசாரித்தமையினால் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை. எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும்.

தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை போலவே பரஸ்பரம் உரக்க சத்தமிட்டுக் கொண்டனர். சில உறுப்பினர்கள் ஒழுக்கமின்றி சத்தமாக பேசிக் கொண்டனர். பிரதம நீதியரசர் தெரிவுக்குழுவில் ஒரேயொரு தடவை மட்டுமே பேசினார்.

அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போது பேசியதை தவிர வேறொன்றுமே பேசவில்லை. தெரிவுக்குழுவில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவருடைய சட்டத்தரணிகளே பதிலளித்தனர். பிரதம நீதியரசர் அவருடைய சட்டத்தரணிகளிடமே கூடுதலான நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்.

அமைச்சராகி விட வேண்டும் என்பதே அரசியல்வாதிகளின் ஆசையாகும். சட்டத்தரணிகள் வாயிலேயே சம்பாதிக்கின்றனர். அரசியல்வாதிகளும் வாயிலேயே சம்பாதிக்கின்றனர். வயதுபோன லக்ஸ்மன் கிரியல்லவும் பதவி ஆசைக்காக எப்படியாவது ஆட்சி பீடம் ஏறி விடலாம் என நினைத்து உயர் நீதிமன்றம் குறித்து பேசி வருகின்றனர்.

தான் விழுந்துள்ள குழிக்குள் பிரதம நீதியரசரையும் பொன்சேகா இழுக்கின்றார். அதிலிருந்தாவது தான் மீண்டெழுந்து விடலாம் என்ற நப்பாசை பொன்சேகாவிடம் இருக்கின்றது.

மிருகம் ஒன்று தனது வாளை வெட்டிக் கொண்டால் சகல மிருகங்களும் வாளை வெட்டிக்கொள்ளும். அவ்வாறான நப்பாசையிலேயே பிரதம நீதியரசரையும் சரத் பொன்சேகா அரசியலுக்கு அழைத்துள்ளார்.

உண்மையை கூறினால் எனது தலை போனாலும் பரவாயில்லை உண்மையை கூறி விடுவேன். ஜே.வி.பி. காலத்தில் அதற்கு எதிராக குரல் கொடுத்ததால் எனது உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது.

தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதால் எங்களுக்கு எதிராக வேறு வகையிலேயே வழக்குகள்·விசாரிக்கப்படும் என்று சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ.தே.கவில் இருந்திருந்தால் எவ்வித மான அச்சமும் இன்றி சுகபோகங்களுடன் இருந்திருக்கலாம். நான் எந்த சவாலுக்கும் முகம் கொடுப்பதற்கு தயாராகவே இருக்கின்றேன். அதனால்தான் பிரபாகரனை கொல்வதற்காக இந்த அரசாங்கத்தில் இணைந்தேன் என்றார். (அ-2)

# கைதான சீன பிரஜைகள் நாடு கடத்தப்படவுள்ளனர்

கைது செய்யப்பட்ட சீனப்பிரஜைகள் நாடு கடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இணையத்தின் ஊடாக நிதி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 100 சீனர்களை இலங்கை அதிகாரிகள் அண்மையில் கைது செய்திருந்தனர். குறித்த சீனப் பிரஜைகளை எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சீனா மற்றும் சீனத் தாய்ப்பே ஆகியவற்றைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். தொலைபேசி மற்றும் இணையத்தை பயன்படுத்தி செல்வந்த சீனர்களிடம் நிதிமோடிகள் செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்கள் விரைவில் நாடு கடத்தப்படவுள்ளதாகவும் சீனாவில் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படக் கூடுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நூறு பேரில் 26 பெண்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# வெளிநாடு செல்வோர் குறித்து அரசு கவனம் செலுத்துவதில்லை

## ஜயலத் எம்.பி.குற்றச்சாட்டு

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுச் செல்வோர் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கையர்களது உரிமைகளை உறுதி செய்யக்கூடிய வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

பாரியளவில் நாட்டுக்கு அந்நிய செலாவணி வருமானத்தை ஈட்டித்தரும் வெளிநாட்டுப் பணியாளர்களை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் அரசாங்கம் உதாசீனப் போக்கை பின்பற்றி வருவதாகவும் இது தொடர்பில் பாராளுமன்றிற்கு உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் பிரகடனங்களை முழுமையாக அமுல்படுத்த அரசாங்கம் தயக்கம் காட்டி வருவதாக ஜயலத் ஜயவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 02.12.2012-20.06.2014

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

## கன்னி



**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**பாம்புக்கிரகம் 2 இல் வர பணவரவு திரண்டுவரும்!** **50/100**

**சந்தோசமொன்றையே நாளும் சந்திக்க வேண்டும் என்று விரும்பும் கன்னி இராசி நேயர்களே!**

நவக்கிரகங்களில் கல்விக்கிரகம் என்று போற்றப்படும் புதன் உங்கள் இராசி நாதனாக விளங்குகிறார். எனவே கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்குவீர்கள். புதன் வலிமை இழந்திருப்பவர்கள், கல்வியறிவைக்காட்டிலும் அனுபவ அறிவு மிக்கவாக்ளாக விளங்குவர். சிக்கனம் வீட்டைக்காக்கும்! சேமிப்பு நாட்டைக்காக்கும். என்ற வைரவரிகளை வாழ்க்கையில் கடைப்பீபிடிப்பவர்களும் நீங்கள்தான். எந்தக் காரியத்தையும் கடைசிவரை இருந்து முடித்துக் கொடுப்பீர்கள். எப்படியும் வாழலாம் என்று நினைப்பவர்கள் மத்தியில் இப்படித்தான் வாழ வேண்டும் என்று நினைப்பீர்கள். மாற்றுக் கருத்துக்களை யாரேனும் உங்களிடம் சொன்னால் மறு நிமிடமே அவர்களை விட்டு விலகி வந்துவிடுவீர்கள். பாட்டி காலத்துப். பழக்கவழக்கங்களிலிருந்து எல்லாவற்றையும் மனதில்பதித்து வைத்துக்கொண்டு கேட்டவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்வீர்கள். கணிதத்தில் தேர்ச்சிபெற்ற நீங்கள் புனித மானவர் என்று மக்களால் போற்றப்படுவீர்கள். உங்களுக்கு இந்த இராகு கேது பெயர்ச்சி என்னென்ன மாற்றங்களையெல்லாம் கொடுக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம்.

**வரவை அதிகரிக்க வைக்கும் 2 ஆம் இடத்து இராகு! ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் கொடுக்கும் அஷ்டமத்துக் கேது!**

இதுவரை விருச்சிக இராசியில் சஞ்சரித்துவந்த இராகுவும் இடப இராசியில் சஞ்சரித்துவந்த கேதுவும் தனது வான்வெளிப்பயணத்தில் 02.12.2012 அன்று பின்னோக்கிச் சென்று உங்களுக்குச் செல்வவளத்தை பெருக்கப் போகிறார்கள். அதேநேரத்தில் அஷ்டமத்தில் அடியெடுத்து வைத்த கேது, அதிக விரயங்களை உங்களுக்கு கொடுக்கப் போகிறார். உங்களின் சுயஜயாதக்தின் அடிப்படையிலும் உங்கள் மனைவி மக்களின் சுயஜாதகத்தின் அடிப்படையிலும் இராகு கொடுக்கும் பலன்களில் மாறுபாடு இருக்கலாம். யோக இராகுவாக இருந்தால், யோகத்தை அள்ளியள்ளி வழங்குவார். இல்லையேல் குறுக்கீடு சக்திகள் அதிகம் வரலாம்.

2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இராகுவைப் பொறுத்தவரை பணப்புழக்கத்தை அதிகரிக்கச் செய்யும் பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். மனம்போன போக்கிலெல்லாம். நீங்கள் செலவு செய்யாமல், மக்கட் செல்வங்களுக்காக செலவு செய்யுங்கள். அல்லது வாங்கிய கடனை தீர்ப்பதற்கு வழிவகை செய்துகொள்ளுங்கள். வாங்கிய கடனைத் தீர்ப்பதற்கு இயலாமல் அவதிப்படுகிறோமே என்று நினைத்தவர்களுக்கு தங்கு தடையில்லாமல் தானகவே தனவரவு வந்துசேரும்.

நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறும் விதத்திலேயே இராகுவின் சஞ்சாரம் இருக்கிறது. பொதுவாக வாக்கு, தனம், குடும்பம் ஆகிய இடங்ளைள் இராகு சார்ந்திருப்பதால் செல்வாக்கை தக்கவைத்துக் கொள்வீர்கள். உயர் மட்டத்திலுள்ளவர்களோடு நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தி உங்கள் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் ஏரளமாக நடைபெற்று குதூகலத்தை வழங்கப்போகிறது.



பெண்குழந்தைகளின் சுபச்சடங்குகள் மற்றும் கல்யாணக் காரியங்களைக் கண்டு மகிழ்வீர்கள். கல்யாண வாய்ப்புகள் கைநழுவிப் போகிறதே என்று கவலைப்பட்டவர்கள் இனி மகிழ்ச்சியடையும் விதத்தில் வரன்கள் வாயில் தேடி வரப்போகின்றன. கையில் பணம் வைத்துக்கொண்டல்லவா கல்யாணம் பேச வேண்டும் என்று நினைத்தவர்களுக்கெல்லாம் கையில் பணம் வந்துசேர பல வழிகளிலும் நண்பர் முன்வருவார்கள். எனவே மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு விரைவில் உருவாகலாம்.

தொழில் வளர்சியில் மூலதனம் போடத் தொகையில்லையே என்பவர்களுக்கெல்லாம் கூட்டாளிகள் புதிதாக வந்திணைந்து உறுதுணை புரிவர்.

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை செலுத்தியவர்களுக்கும் ஆதாயம் வந்துசேரும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். தாய்வழி ஆதரவு பெருகும். தந்தைவழியில் ஏற்பட்ட விரிசல் அகலும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் விலகி புதிய சொத்துக்கள் வாங்குபவர்களுக்கு அந்நிய தேசத்திலிருந்து ஆதரவுக்கரம் நீட்டுவோரின் ஆதரவு கிடைக்கும்.

**அஷ்டமத்துக் கேதுவால் ஆதாயம் உண்டா?**

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் கேது அலைச்சலை உருவாக்கும் என்று சொல்வார்கள். ஆனால், அந்தக்கேதுவின் பார்வை தொழில் ஸ்தானத்திலும் புத்திர ஸ்தானத்திலும் பதிவாகிறது. எனவே தொழில் சம்பந்தமாக ஒன்றுக்கு இரண்டுமுறை அலைச்சலைக் கொடுக்கும். முடிவில் ஆதாயம் கிட்டும். அதேநேரம் புத்திர ஸ்தானத்தின் மீதும் பதிவதால் பிள்ளைகள் வழியில் சபவிரயங்கள் உருவாகலாம்.

இந்த நேரத்தில் கேதுவை மட்டும் திருப்திப்படுத்தினால் போதாது. அதன் வால்பகுதியாக இருக்கும் இராகுவையும் திருப்திப்படுத்தியே ஆகவேண்டும். எனவே பூரணமாக சர்ப்பதோச பரிகாரத்தை செய்தால்தான், முழுமையான நற்பலன் கிடைக்கும்.

அதிலும் 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது உங்கள் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால், கட்டாயம் சிறப்பு வழிபாடுகள் தேவை. அது மட்டுமல்ல மற்றவர்களுடன் பழகும் பொழுதும் கொஞ்சம் கவனமும் தேவை. வீட்டில் விவகாரங்கள் ஏற்படாமல் இருக்க விட்டுக்கொடுத்து செயற்படுவது நல்லது. போட்டியாளர்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் பொருளாதாரத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பதே உத்தமம்.

மாற்றங்கள் அதிகமாக வந்தாலும், வரும் மாற்றம் பெருமாற்றமா என்பதை அறிந்து செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுங்கள். ஒவ்வொருநாளும் வழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. குடும்பத்து இரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்லால் இருப்பது நல்லது. இல்லையேல் விவகாரங்களைச் சந்திக்கநேரிடும். இடமாற்றம் நிகழும்பொழுது சனியின் ஆதிக்கம் இல்லையா என்று பார்த்து முடிவெடுப்பது நல்லது.

சில சொத்துக்கள் விரையமாகலாம். அதேநேரத்தில் சில சொத்துக்களை வாங்குவதற்கான வாய்ப்புகளும் கைகூடிவரும். உங்கள் இராசியைப் பெறுத்தவரை 3,8 இற்கு அதிபதியாக செவ்வாய் விளங்குகிறார். எனவே சொத்துப் பிரச்சினைகள் வரும் பொழுதோ அல்லது பத்திரப் பதிவுகள் வரும்பொழுதோ கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**பாதசார மாற்றங்களால் பலன் தரும் இராகு!**

விருச்சிக இராசியில் அடியெடுத்து வைத்த இராகு இப்பொழுது துலாம் இராசியில் நுழையும்போது முதலில் குருகாலில் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக தொழில்துறையில் முன்னேற்றம், தொடர்ந்திருந்த நோய் விலகும் வாய்ப்பு, சகோதரர்களால் சகாயம் ஏற்படும். நாட்பட்ட கடன்கள் வசூலாகும். நல்லகாரியம் ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

இராகு தனது சுயகாலில் சஞ்சரிக்கும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயற்படும் சூழ்நிலையும் கொடுக்கல், வாங்கல்களில் எதிர்பார்த்தபடி இலாபமும் கிடைக்கும் நேரமிது.

இராகு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். உடல் ஆராக்கியத்தில் ஏதாவது குறைபாடுகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. நண்பர்களால் ஏமாற்றமும் நல்ல காரியம் நடைபெறுவதற்கு இடையூறுகளும் ஏற்படலாம். எனவே இக்காலத்தில் தெசாபுத்திக்கு ஏற்ப தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!**

மேட இராசிக்குள் அடியெடுத்து வைக்கும் கேது முதலில் சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி சாரம் என்பதால், விரயங்களே அதிகரிக்கும். வரவைக்காட்டிலும் செலவு கூடும். வளர்ச்சியில் சிறிது தளர்ச்சி தோன்றும். இறைவழிபாட்டில் நீங்கள் கூடுதல் ஈடுபாடு செலுத்தினால்தான் குறைவற்ற வாழ்க்கை வாழ இயலும். பயணங்கள் அதிகரிக்கும். பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு குறைவாகவே கிடைக்கும். வண்டி வாகனங்களின் பழுதுச் செலவுகள் உண்டு.

கேது, சுக்கிரன்சாரத்தில் சஞ்சரிக்கும்போது, பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாராட்டுமழையில் நனையும் வாய்ப்பு உண்டு. நகை வாங்கும் சூழ்நிலையும் ஆடைகள் மற்றும் ஆடம்பரப்பொருட்கள் வாங்கும் அமைப்பும் உருவாகும். குடும்பத்தில் சுபகாரயப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். கல்யாணக்கனவுகள் நனவாகும். தந்தை வழியில் தக்க உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். சிந்தனை அனைத்தும் சம்பாத்தியத்தின் மீது செலுத்தவேண்டியிருக்கும்.

கேது சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது முன்பு சம்பாதித்த சம்பாத்தியங்களை எல்லாம் விரயம் செய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டுப்பிரச்சினைகள் சிலவற்றை கண்டும் காணமல் இருப்பது நல்லது. உறவினர்கள் கண்திருஷ்டிக்கு ஆளாக நேரிடலாம். எனவே, வளர்ச்சிகளை அளவோடு சொல்லி, வளமோடு வாழ்வது நல்லது.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

2 ஆம் இடத்து இராகுவால் இனிய பலன்கள் வந்துசேரவும் அஷ்டமத்துக் கேதுவால் ஆரோக்கியப் பாதிப்புகள் இல்லாமல் இருக்கவும் வெள்ளிக்கிழமை தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபடுவது நல்லது. இராகு-கேதுக்களின் சாரபலத்தை சுயஜாதக ரீதியாக அறிந்துகொண்டு பரிகாரம் செய்வதோடு அருகிலுள்ள உமையம்மை ஆலயம் சென்று வழிபட்டு அனைத்துக் காரியங்களிலும் வெற்றியினை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

# குடும்பத்தில் ஏராளமான மகிழ்ச்சிகர சம்பவங்கள் நடைபெறவிருக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிள்ளைப்பாசம்

சந்தனபுரி நாடு ஆற்றுவளம், ஊற்று வளம், கடல்வளம், காட்டுவளம், மண் வளம், பொன்வளம், மனித வளம் என்று எல்லா வளங்களைப்பெற்று வீரமும் ஈரமும் தீரமும் கொண்டு திகழ்ந்தது. மன்னன் சிங்கராஜனுக்கு ஐந்து புதல்வர்கள். அவர் தன் புதல்வர்கள் ஐவரின்மீதும் ஒரே மாதிரியான அன்பும் பாசமும் வைத்திருந்தான். ஒருவனுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் அதே கவலையில் அவரும் படுத்துக்கொள்வார். ஒருவன் உண்ணவில்லை என அறிந்தால் அவரும் உண்ணும் வரைக்கும் இவர் பட்டினி கிடப்பார்.

எனக்குப் பஞ்சபாண்டவர்களே மகவுகளாக பிறந்திருக்கும்போது எனக்கென்ன கவலை? என மார்தட்டிக் கொள்வான். ஐந்து புதல்வர்களும் இந்த அவனியை ஆள்வதை கற்பனை செய்து பார்த்து மகிழ்ச்சியடைவான். என் எதிரிகள் எல்லோரும் இனிமேல் பஞ்சு பஞ்சாய் போவார்கள் எனப் பூரிப்பில் மிதந்தான். இவர் நினைத்து போல் எதிரிகள் யாரும் பஞ்சு பஞ்சாய்ப்போகவில்லை. இவர்தான் பஞ்சு பஞ்சாய்ப்போனார்.

பஞ்சபாண்டவர்கள் பஞ்சமா பாதகர்கள் ஆனார்கள். பிள்ளைகளாய்ப் பிறந்தவர்கள் தொல்லைகளாய் நின்றனர். ஐந்து புதல்வர்களுக்குள்ளும் ஒற்றுமை என்பது இம்மியும் இருந்ததில்லை. ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்வதை அன்றாடப் பொழுதுபோக்காக்கி கொண்டிருந்தனர். சிறிய வயதிலிருந்தே அவர்களுக்கு இப்படியொரு பழக்கம். சிறிய வயதுதானே? போகப் போக எல்லாம் சரியாகி விடும் என அரசன் எண்ணியிருந்தான்.

நாளுக்கு நாள் வளர்ந்ததே தவிர அவர் நினைத்தது போல் சரியாகவில்லை அவரால் சரிப்படுத்தவும் முடியவில்லை அவர்கள் போட்டுக் கொள்ளும் சண்டைக்கு ஏதாவது ஓர் அற்பக் காரணம் கூட இருக்காது. காரணமின்றியே மோதிக் கொள்வார். இரத்தக்காயத்தோடு நிற்பர்.

அரசன் என்ற அப்பன் சொல்லையும் கேட்பதில்லை. அரசி என்ற அம்மா சொல்லையும் கேட்பதில்லை அமைச்சர் சொல்லையும் கேட்ப தில்லை. அந்தப்புர உறவினர் சொல்லையும் கேட்பதிலலை. அரண்மனைக் குரு ஆளவந்தார். மிகச் சிறந்த ஞானி அவர் சொல்லுக்கு அடுத்த சொல் இல்லை என அந்த நாடே புகழும். அப்பேற்பட்ட ஆளவந்தாரே பேசிப் பார்த்தார். ஒருமுறை அல்ல. பல முறை ஐம்புலன்களையும் அடக்கிய அவரால் இந்த ஐவரையும் அடக்க முடியாமல் திண்டாடிப்போனான். திருதிருவென விழிக்கலானார். முடிவில் முதலைகளைபோல பிடித்த பிடியை விடாதிருக்கும் இவர்களை திருத்த அந்த ஆண்டவனால்கூட இயலாது என்று இடத்தைக்காலி செய்துவிட்டு மீண்டும் இமயத்திற்கே சென்று விட்டார்.


இந்தக் கவலையிலேயே கருங்கல் போல இந்த மன்னன படுத்த படுக்கையானான். அரண்மனை மருத்துவருக்கு மட்டுமில்லை. அந்தப்புரத்தில் இருந்த அனைவருக்கும் தெரிந்த உண்மையாகிவிட்டது. சோதிடன் வரவழைக்கப்பட்டான்.

மன்னனுக்கு ஒரு பெரிய கண்டம் இன்னும் இரண்டு திங்கள்வரை அந்தக்கண்டம் நீடிக்கவாய்ப்பிருக்கிறது. அதன்பின்புதான் அரசனின் ஆயுள் கணக்கை உறுதியாய் கூறமுடியும் என்றான். தந்தை நோய்வாய்ப்பட்டிருக்கிறாரே என்ற கவலை அந்த ஐந்து பிள்ளைகளில் எந்தப்பிள்ளைக்குமே இல்லை. மாறாக மகிழ்ச்சியே இருந்தது.

கிழவன் சீக்கிரம் செத்தால்தானே தனக்கு மகுடம் கிடைக்கும்! மருத்துவ சிகாமணியே உம் மருத்துவத்தால் மன்னன் எக்காரணம் கொண்டும் பிழைத்துவிடக் கூடாது. ஒருவேளை அவர் பிழைத்துவிட்டார் என்றால் அப்புறம் நீ பிழைத்திருக்கமுடியாது!

மிரட்டினான் ஒருபுதல்வன். அரசனுக்குப் பின் ஆனை, சேனை பட்டாளத்துடன் அரசாளவேண்டும். ஆட்சிபீடத்தை அலங்கரிக்கவேண்டும் என்ற தீராத ஆசைதான். பிள்ளையா இவர்கள்? பேரரசனுக்கு வாய்ந்த தொல்லைகள் அப்போதே சொன்னேன். ஒன்றுக்குமேல் வேண்டாமென்று கேட்டாரா மன்னன்? கேட்கவில்லையே!

பிள்ளைகளைச் செல்வம் என்றார், கடவுள் கொடுத்தவரம் என்றார், சோற்றுக்குப் பஞ்சமா என்றார், சோற்றுக்குக் குறைவா என்றார், அதிக பிள்ளைகளை அரசனுக்குப் பலம் என்றார். இன்று அவதிப்படுகிறார். மருத்துவரின் மனம் எண்ணிற்று. வாய் மௌன விரதம் மேற்கொண்டது. அப்பன் படுத்த படுக்கையில்.



அரண்மனையில் கலவரம்! சீரளபுரியே ஐந்து பங்காக பிரிந்து நின்று மோதிக் கொண்டது. வாள்கள் ஒன்றுடன் ஒன்று உரசிக்கொள்ளும் ஒலியும் ஐயோ அம்மா! என்ற அலறலும் காதைத்துளைத்தன. கட்டடங்கள் கொழுந்துவிட்டு எரிந்தன. உள்நாட்டு கலவரத்தில் சீதளபுரி.

எங்கு நோக்கினும் கொலை, கொள்ளை! சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர் சமூகவிரோதிகள். சுருட்டியவரை ஆதாயம் எனச்சுருட்டிக் கொண்டனர். இருட்டிய பின்பு திருட்டுத் தொழில் செய்தவர்கள் பட்டப்பகலி லேயே பலரது தாலிகளை அறுத்தனர். பெண்கள் வெளியே தலை காட்ட முடியவில்லை. குழந்தைகள் தெருவிற்கு விளையாட வர இயலவில்லை. எங்கு நோக்கினாலும் பிணக்காடு. இரத்தவெள்ளம்.

பக்கத்துநாடு சந்தனபுரி. அதன் மன்னன் சந்தனவர்மன். சீரளபுரியின் நீர்வளமும் நிலவளமும் செல்வச் செழிப்பும் அவ்வளவு கண்ணை உறுத்திக் கொண்டேயிருந்தன. எவ்வாறேனும் சீதளபுரியைக் கைப்பற்றி விடவேண்டுமென்று நாக்கை முழம் நீளம் தொங்கப்போட்டுக்காண்டிருந்தான். பலமுறை படையெடுத்தும் தோல்வியைத்தவிர அவனுக்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை. சீதளபுரி பெரும்படை அவனைச் சின்னாபின்னமாக்கியது.

சகோதர கலவரத்தில் தொடங்கி உள்நாட்டுக் கலவரமாக உருமாறி இருக்கும். இந்த நேரமோ சீதளபுரியை சிறைபிடிப்பதற்கு தக்கதருணம் என்று எண்ணிப் போர் முரசு கொட்டிவிட்டான்.

தன் மூத்த மைந்தனை அழைப்பித்தான் மன்னன். எனக்குப் பின்பு நீதான் இந்த நாட்டிற்கு அரசன். இதுதான் அரசகுல வழக்கம். நீ முடிசூடா மன்னன். நான் இருக்கவேண்டிய இடத்தில் நீ இருந்து சந்திரவர்மனை எதிர்க்கப் படை நடத்து என்று ஆணை இட்டான். மூத்தவன் போன பின்பு அமைச்சருடன் அரசன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

அமைச்சரே நானும் பிழைக்கமாட்டேன். இந்தநாடும் பிழைக்காது என முன்னோராலும் என்னாலும் கட்டிக் காப்பாற்றப்பட்டு வந்த இந்த நாடு மாற்றானுக்கு மண்டியிடப்போவது நிச்சயம். அதில் சந்தேகமேயில்லை. அது மண்டியிடுவதற்கு மன்னால்நான் மரணமடைந்துவிடவேண்டும் என்று கண்கலங்கி திக்கித்திக்கி மூச்சுத்திணற லோடு சொன்னான்.

தந்தை மூத்தவனை முடிசூடா மன்னன் எனச் சொல்லியதும் படை திரட்டி பகைவனை எதிர்க்க ஆணையிட்டதும் ஏணைய நான்கு புதல்வர்களின் மத்தியில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது நெருப்பில் விழுந்த புழுவாய் நெளிந்தன. சந்தனபுரியான் எனக்கு எதிரியில்லை. நீயே என் முதல் எதிரி எனப்படுக்கையில் கிடந்த மன்னனின் மீது வாளைப் பாய்ச்சினான் இரண்டாவது புதல்வன்.

சொந்த நாட்டில் சாகும் பாக்கியம் கிடைத்துவிட்டதே! எண்ணி சிரித்துக் கொண்டே இருந்தான். இன்னும் நால்வர் உயிரோடு இருக்கிறார். அவர்களை கொல்லவேண்டும். எங்கே அவர்கள்....? என்று பரபரப்பாய் ஓடிக்கொண்டிருந்தான். இவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது போலும். தந்தையைக் கொன்றுவிட்டு உடன் பிறந்தவர்களையும் கொல்வதற்கு இப்படி ஓடுகிறானே! என அமைச்சன் எண்ணிக்கொண்டார்.

இவருக்கு மட்டும் என்ன? ஆட்சிபீடம் ஏறவேண்டுமென்ற பைத்தியம் இவனோடு பிறந்தவர்களுக்கெல் லாம் பிடித்திருந்தது. மகுடத்தை தலை யில் சுமக்க ஆசைப்பட்டனர். தலை தான் இல்லை. தலையை மதுரவாய லிடம் இழந்து முண்டமாய்க் கிடக்கின்றன.

நாட்கள் சென்றன. அரண்மனைக் காவலரும் அமைச்சரும் பதவியை இழந்த நிலையில் சாதாரண குடிமக்களாய் ஓர் ஏரிக்கரையில் நடந்து சென்றனர். அப்போது அரண்மனைக் காவலர் சீதளபுரியின் சீரழிவுக்கு ஐந்து புதல்வர்கள்தானே காரணம் என்று கேட்டான். உடனே அமைச்சன் இல்லை. இல்லை. அரசனே காரணம் என பழிச்சொல் கூறினான். என்ன அப்படிச் சொல்கிறீர்கள்! நம் அரசர் எவ்வளவுநல்லவர்! உயர்ந்தவர்! உத்தமமானவர்! ஒழுக்கசீலர்! ஏக பத்தினி விரதர்! இந்த ஐந்து புதல்வர்களிடமும் அளவு கடந்த பாசம் செலுத்தியவர். அவரைப் பார்த்த இப்படிச் சொல்கிறீர்கள்? எல்லாம் சரிதான்! கடைசியாக என்ன சொன்னீர்கள். இந்த ஐந்து புதல்வர்களிடமும் அளவுகடந்த பாசம் செலுத்தியவன் என்றே.

உம்பிள்ளைகளிடம் பெற்றோர் பாசம் வைக்கவேண்டியதுதான். அளவு கடந்த பாசம் வைக்கவேண்டியதில்லை. சீதளபுரியின் நாசத்திற்கு அந்தப் பாசமே காரணமாயிற்று. விளக்கமாகச் சொல்லுங்கள்.

பிள்ளைகள் தவறு செய்யும் போது அவற்றினைச் சொல்லித் திருத்த வேண்டும். அப்படியில்லாமல் பிள்ளைகள் செய்யும் தவறுகளை எல்லாம் கண்டுகொள்ளாமல் இருந்தால் பிள்ளைகள் தறுதலைகளாகத் தான் ஆவார்கள்.

தனக்குப் பிறந்த ஐந்து புதல்வர்களையும் தறுதலைகளாக ஆக்கிய வர். அவர்கள் செய்யும் தவறுகளுக்கு எல்லாம் துணைபோனார்! ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு இருவருக்குள் சண்டைவந்தால் வீரர்கள் இப்படித்தான் மோதிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் துணிவு வரும் என உற்சாகமூட்டுவார். பின்னர் அந்தத்துணிவே கல்வி கற்றுத் தரும் ஆசிரியரை அடிக்கும் அளவிற்கு வந்தபோது ஆசிரியரே அரண்மனை பிள்ளைகளுக்கு கல்வி தேவையில்லை. அதையெல்லாம் அமைச்சர் பார்த்துக்கொள்வர் என்பர். பிள்ளைகளின் உடல் நலத்தைக் கவனித்தார் தானே தவிர அறிவு நலத்தை கவனிக்கவில்லை. குழந்தைகள் தறுதலைகளாக பிறப்பதில்லை. வளர்க்கும் முறை சரியில்லாததால்தான் தறு தலைகளாகின்றனர் என்று முன்னாள் அமைச்சர் கூறியதை முன்னாள் காவலர் முகமலர்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பியமை சட்டவிரோதமானது

## நீதிமன்றில் ஆஜர்படுத்தாதது ஏன் - சுமந்திரன்

(கொழும்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாணவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யாது நேரடியாக புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி வைத்தமை சட்டவிரோதமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கைது உத்தரவு எதுவுமின்றி பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். மாணவர்கள் சுய விருப்பின் அடிப்படையில் புனர்வாழ்வு முகாம்களுக்கு சென்றதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இராணுவத்திற்கு தமிழ் யுவதிகள் இணைத்துக் கொள்ளப்பட்ட விதம் முறையானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பிரதம நீதியரசருக்கு எதிரான தெரிவுக்குழு பக்கச்சார்பானது

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்ற தெரிவுக்குழு பக்கச் சார்பானது என சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர தெரிவித்துள்ளார்.

சாதாரண வழக்கு விசாரணைகளில் குற்றம் சுமத்தப்பட்டோருக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் கூட பிரதம நீதியரசருக்கு கிடைக்கவில்லை. நீதி அனைவருக்கும் சமமானதாக அமைய வேண்டும்.

அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவது குற்றச் செயலாக கருதப்படுகின்றது. இது ஓர் மோசமான நிலைமையாகும்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்திலும் இவ்வாறானநிலைமை காணப்பட்டது.

பத்திரிகை நிறுவனங்கள் முத்திரையிடப்பட்டன. அதிகார மோகத்தில் செய்வதறியாது இவ்வாறு நடந்து கொள்கின்றனர். இந்த அரசாங்கத்தின் வெற்றிக்காக நாம்பாடுபட்டோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவளித்தோம். எனினும் அரசாங்கத்தின் சகல பிழைகளையும் ஏற்றுக் கொண்டு அதற்காக குரல் கொடுக்க நாம் தயாரில்லை.

நீதிமன்றின் சுயாதீனத் தன்மைக்கு களங்கம் ஏற்பட்டால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2-9)

# ரணிலின் 'மூளை' விசேடமானது

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் விக்ரமசிங்கவுடன் நான் நீண்ட நாட்கள் அரசியல் செய்துள்ளேன். அவருடைய *மூளை* விசேடமானது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

குற்றப்பிரேரணை தொடர்பில் பொது நலவாய மாநாட்டிற்கு கடிதம் எழுதப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. கட்சியை வெற்றிகொள்ள தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு அவருக்கு இருக்கும் ஆளுமை போதாது.

ஆனால், கடிதம் எழுதுவதில் அவருடைய *மூளை*விசேடமானது. பொது நலவாய மாநாட்டிற்கு திகதியை மாற்றி கடிதத்தையும் எழுதிவிட்டு கடிதம் எழுதப்போவதாக தற்போது தெரிவிக்கின்றனர்.

திகதியை மாற்றி கடிதம் எழுதுவதற்கு அவருடைய மூளையே சிறந்தது என்றார். (அ-2-9)

# வெள்ளம் காரணமாக சிலருக்கு வயிற்றோட்டம்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

மழை, வெள்ளத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளான பிரதேச மக்களுக்கு பரவும் வயிற்றோட்டம் மற்றும் தொற்று நோய்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வயிற்றோட்டம் மற்றும் தொற்று நோய்களினால் பாதிப்புக்குள்ளான பலர் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நோயாளர்களுக்கான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை நோய் தொற்றுக்குள்ளானவர்களுக்கான தேவையான சிகிச்சைகளை இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ள இடங்களிலும் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

வெள்ள நீர் வற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள கிணறுகளுக்கு குளோரின் இடும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# 2012.12 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1066- முதலாம் வில்லியம் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.

★ 1643-கிறிஸ்மஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டு பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ரோயல் மேரி கப்பலின் தலைவன் வில்லியம் மைநோர்ஸ் என்பவரால் இத்தீவுக்கு கிறிஸ்மஸ் தீவு எனப் பெயரிடப்பட்டது.

★ 1741-ஆண்டர்ஸ் செல்சியஸ் தனது செல்சியஸ் வெப்பமானியைக் கண்டுபிடித்தார்.

★ 1758-ஹேலியின் வால்வெள்ளி ஜொகான் பாலிட்ச் என்னும் ஜேர்மனியரால் அவதானிக்கப்பட்டது.

★ 1868-அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட அனைத்து கூட்டமைப்புப் படைவீரர்களுக்கும் பொது மன்னிப்பை அமெரிக்க ஜனாதிபதி அண்ட்ரூ ஜோன்சன் அறிவித்தார்.

★ 1914-முதலாம் உலகப் போர்: ஜேர்மனிக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் கிறிஸ்மஸ் நாள் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

★ 1926-ஜப்பானின் டாயீஷோ மன்னன் இறந்தான். அவனின் மகன் ஹீரோஹிட்டோ அரசனானான்.

★ 1932-சீனாவின் கான்சு நகரில் 7.6 நிலநடுக்கம் ஏற்பட்டதில் 70 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

★ 1947- சீனக் குடியரசின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.

★ 1968- சம்பளம் அதிகம் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட 42 தலித் மக்கள் தமிழ்நாட்டில் உயிருடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1979-சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானில் தனது படைகளை பெருமளவில் இறக்கியது.

★ 1989-ருமேனியாவின் முன்னாள் கம்யூனிசத் தலைவர் நிக்கொலாய் செய்செஸ்குவுக்கும் அவரது மனைவிக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1990- உலகளாவிய வலைத் திட்டம் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

★ 1991-சோவியத் தலைவர் பதவியில் இருந்து மிக்கைல் கொர்பச்சோவ் விலகினார். அடுத்த நாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.

★ 1991-உக்ரேன் சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகியது.

★ 2003- மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தில் இருந்து டிசெம்பர் 19 இல் ஏவப்பட்ட பீகில் 2 விண்கலம் தரையில் இறங்குவதற்கு சற்று முன்னர் காணாமல் போனது.

★ 2004- காசினி விண்கப்பலில் இருந்து சனிக்கோளின் சந்திரனான டைட்டானில் இறக்குவதற்காக ஹியுஜென்ஸ் என்ற சேய்க்கலம் விடுவிக்கப்பட்டது. இது 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி டைட்டானில் இறங்கியது.

### பிறப்புக்கள்

★ 1642-ஐசக் நியூட்டன், ஆங்கில இயற்பியலாளர் மற்றும் கணிதவியலாளர் (இ.1727)

★ 1876-முகமது அலி ஜின்னா, பாகிஸ்தானை தோற்றுவித்தார். (இ.1948)

★ 1906-ஏர்ணஸ்ட் ருஸ்கா, ஜேர்மனிய இயற் பியலாளர், நோபல் விருதாளர் (இ.1988)

★ 1918-அன்வர் சதாத், எகிப்திய தலைவர், நோபல் விருதாளர் (இ.1981)

★ 1924-அடல் பிஹாரி வாஜ்பாய், முன்னாள் இந்தியப் பிரதமர்

★ 1949-நவாஸ் ஷெரீப், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்

★ 1974-நக்மா, இந்திய நடிகை

### இறப்புக்கள்

★ 1796-வேலு நாச்சியார், ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண் போராளி (பி.1730)

★ 1931-பா.வே.மாணிக்கநாயக்கர், அறிவி யல் தமிழ் வளர்த்த தமிழறிஞர்(பி.1871)

★ 1977- சார்லி சாப்ளின், ஹோலிவுட் நடிகர் (பி.1889)

★ 1994-ஜெயில் சிங், முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் (பி.1916)

★ 2006-தமிழோவியன், இலங்கையின் மலையகத்தின் மூத்த இலக்கியவாதியும் கவிஞரும் ஆவார்.

### சிறப்பு நாள்

★ கிறிஸ்மஸ் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை குறிக்கும் முக்கிய பண்டிகை

### ஐசாக் நியூட்டன்



ஐசாக்நியூட்டன்ஒருஆங்கிலக் கணிதவியலாளரும் அறிவியலாளரும் தத்துவ ஞானியும் ஆவார். அறிவியல், கணிதம், இயந்திரவியல் துறைகளிலும் ஈர்ப்பு விசை பற்றியும் பெரிதும் ஆய்வுகள் மேற்கொண்டவர் நியூட்டன்.

1687 இல் ஈர்ப்பு சம்பந்தமான விளக்கங்களை உள்ளடங்கிய Philosophiae Naturalis Principia Mathematicaஎன்னும் நூலை வெளியிட்டார். இவருடைய இயக்க விதிகள் மூலம் (Classical Mechanics) என்னும் துறைக்கு வித்திட்டார்.

**இளமை**

ஐசாக் நியூட்டன் 1642 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று இங்கிலாந்தில் உள்ள வூல்ஸ்தேர்க் எனும் ஒரு சிற்றூரில் ஒரு சராசரி விவசாய குடும்பத்தில் பிறந்தார். இவர் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இவரது தந்தையார் இறந்துவிட்டார். இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் நியூட்டனை அவரது பாட்டியின் கவனிப்பில் வளர்ந்து வந்தார்.

**கல்வி**

சிறுவயதிலேயிருந்து நியூட்டனுக்கு அறிவியலில் ஈடுபாடு இருந்தது. தண்ணீரிலும் வேலை செய்யும் கடிகாரத்தை அவர் சிறுவயதிலேயே உருவாக்கினார். ஆனால், நியூட்டன், டெஸ்கார்ட்டஸ், கலிலியோ, போப்பர் னிக்கஸ், கெப்ளர் ஆகிய அக்காலத்து நவீன தத்துவ வாதிகளுடைய கருத்துக்கல்ளயே கற்கவிரும்பினார்.

1665 இல் பைனோமியல் தேற்றத்தைக் கண்டு பிடித்ததுடன் பிற்காலத்தில் நுண்கணிதம் என வழங்கப்பட்ட புதிய கணித கோட்பாடொன்றை உருவாக்கத் தொடங்கினார்.

**கண்டுபிடிப்புக்கள்**

புவிசார் மற்றும் விண்வெளிசார் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் இயற்கை விதிகளை முதன் முதலில் விளக்கியவர் இவரேயாவார்.

**ஈர்ப்பு விதி கண்டுபிடிப்பு**

நியூட்டன் அப்பிள் மரமொன்றின் கீழ் இருந்தபோது பழமொன்று அவர் தலையில் விழுந்ததாகவும் இது அவர் சிந்தனையைக் கிளறி புவிசார்ந்த விண்வெளி சார்ந்த ஈர்ப்பு பற்றிய எண்ணக்கரு உதித்ததாகவும் கதை உள்ளது.

**விசை பற்றிய கோட்பாடுகள்**

எல்லாப் பொருட்களும் ஒன்றையொன்று ஈர்க்கும் தன்மையுடையன. அந்த ஈர்ப்பு விசை இரு பொருட்களுடைய நிறைகளின் பெருக்கலுக்கு நேர் விகிதத்திலும் அவ்விரு பொருட்களின் இடையே உள்ள தூரத்தின் வர்க்கத்திற்கு எதிர் விகிதத்திலும் இருக்கும். ஒவ்வொரு வினைக்கும் அதற்கு எதிர்த் திசையிலிருந்து சமமான எதிர் வினை நிகழும். ஒரு நிலையான பொருளை நகர்த்துவதற்கு புறவிசை இன்றியமையாதது.

**சிறப்புக்கள்**

1705 ஆம் ஆண்டு லண்டன் ராணி (Queen Anne) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கு வருகை மேற்கொண்ட போது நியூட்டனுக்கு சர் பட்டம் வழங்கி சிறப்பித்தார்.

**இறுதிக்காலம்**

நியூட்டன் நோய்வாய்ப்பட்டு 1727 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி இயற்கை எய்தினார். லண்டனின் புகழ்பெற்று Westminster Abbey யில் அடக்கம் செய்யப்பட்டார். மனித குலத்தின் மிகச் சிறந்த விலை மதிப்பில்லா மாணிக்கம் என்று அவர் கல்லறையில் பொறிக்கப்பட்டது. நியூட்டனுக்கு பலர் அஞ்சலி செலுத்தினாலும் போப் எழுதிய அஞ்சலி மிக ஆழமானது. இந்த வாசகம் நியூட்டன் பிறந்த அறையில் இன்றும் பொறிக்கப்பட்டிருக்கின்றது. இயற்கையும் அதன் விதிகளும் இருளில் கிடந்தன. கடவுள்.... நியூட்டன் பிறக்கட்டும் என்றார் ஒளி பிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தேர்தல்-ஓர் ஆய்வு

# ஜனநாயகமா? பணநாயகமா?

கடந்த நவம்பர்மாதம் 6 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்று அழைக்கப்படும் வட அமெரிக்காவில் குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். குடியரசுத் தலைவர் தேர்தல் எப்பொழுதும் நவெம்பர் மாதத்தில் முதல் செவ்வாய்க் கிழமையன்று நடத்தப்படுவது வழக்கமாக் கப்பட்டுள்ளது. 06.11.12 அன்று நடந்த தேர்தல், 45 ஆவது குடியரசுத் தலைவர் பதவிக்கானதாகும். தேர்தலில் வெற்றிபெறும் குடியரசுத் தலைவர் அடுத்த ஆண்டு ஜனவரி



20 ஆம் நாள் பதவி ஏற்பது என்பது நடைமுறை வழக்கம்.

07.10.12 அன்று தென்னமெரிக்க நாடுகளுள் ஒன்றான வெனிசுலாவில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் ஹுகோ சாவேசு தொடர்ந்து நான்காவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் ஆறு ஆண்டுகள் அப்பதவியில் நீடிப்பார். இதே போன்று கடந்த நவம்பர் மாதம் சீனாவில் அதிபர், பிரதமர் பதவிகளுக்கான தேர்தல் நடந்தது. சீனாவில் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய அதிபரையும் பிரதமரையும் பொதுவுடமைக் கட்சியின் பேரவை கூடி தேர்ந்தெடுக்கிறது. சீனாவில் பொதுவடமைக் கட்சியின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்தான் எல்லா அதிகாரங்களும் பெற்ற அதிபர்–ஆட்சித்தலைவர் பதவியில் இருப்பார்.

தென்னமெரிக்க நாடுகளில் வேரூன்றியிருந்த வடஅமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பை முறித்ததிலும், சமூகத்திலும், பொருளாதாரத்திலும் உழைக்கும் மக்களின் வாழ்வில் மலர்ச்சியும் முன்னேற்றங்களும் ஏற்பட்டதிலும் பெரும் பாடாற்றிய சாவேசின் தேர்தல், ஊடகங்களில் ஒரு நாள் செய்தியாக மட்டுமே இடம்பெற்றது. அதைப் போலவே 135 கோடி மக்கள் தொகை கொண்ட – கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக உலகில் பொருளாதார வளர்ச்சியில் முதலிடத்தில் உள்ள சீனாவில் புதிய ஆட்சிப்பொறுப்பாளர்களின் தேர்தல் குறித்து, செய்தி ஏடுகளில் விரிவாக விவாதிக்கப்படவில்லை. ஆனால், வட அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் தேர்தல் மட்டும் பல மாதங்கள் பாபரப்பாக பேசப்படும் முதன்மையான அரசியல் செய்தியாகிவிடுகிறது. உலக நாடுகளின் பொருளியல், அரசியல், சமூக நிலைகளைத் தீர்மானிக்கின்ற– ஆட்டிப்படைக்கின்ற வல்லமை வாய்ந்த முற்றதிகாரம் பெற்ற உலகின் ஒரே வல்லாதிக்க அரசாக வட அமெரிக்கா திகழ்வதே இதற்கான காரணமாகும்.

இந்தியாவில் பாமரனுக்கும் தெரிந்த ஒரு செய்தி– அமெரிக்கா மிகப்பெரிய பணக்கார நாடு என்பதாகும். அதனால்தான் தன் மகனை ஆங்கில மொழியில் படிக்கவைத்து அமெரிக்காவுக்கு வேலைக்கு அனுப்ப வேண்டும் என்பது ஒவ்வொருவரினதும் கனவாக இருக்கிறது. வட அமெரிக்கா, உலகில் முதல் நிலையில் உள்ள பணக்கார நாடாக இருக்கிறது என்பது உண்மைதான். உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் வடஅமெரிக்கா முதலிடத்தில் இருக்கிறது. நாட்டின் மொத்த வருவாயை மொத்த மக்கள்தொகை எண்ணிக்கையால் வகுப்பதால் கணக்கிடப்படும் சராசரி குடிமகனின் வரவாய் என்பதிலும் அமெரிக்கா முதல் இடத்தில் இருப்பதில் வியப்பேதுமில்லை. இந்தச் சராசரி வருவாய்க் கணக்கு என்பது பணக்காரன்– ஏழை ஏற்றத்தாழ்வை மூடி மறைப்பதற்கான முகமூடியே ஆகும்.

2007 இல் அமெரிக்காவிலுள்ள பெருஞ் செல்வர்களான ஒரு விழுக்காட்டினர் நாட்டின் செல்வத்தின் 3. 6 விழுக்காட்டையும், அவர்களுக்கு அடுத்தபடியாக உள்ள 19 விழுக்காட்டினர் 50.5 விழுக்காட்டையும் உடமையாகக் கொண்டிருந்தனர். அதாவது சமுதாயத்தின் உயர் நிலைகளிலுள்ள 20 விழுக்காட்டினரிடம் நாட்டின் செல்வத்தில் 85 விழுக்காடும், கிழ் நிலையிலுள்ள 80 விழுக்காட்டினரிடம் 15 விழுக்காடும் இருந்தன. ஒட்டு மொத்தச் செல்வத்திலுள்ள ஏற்றத்தாழ்வை விடக் கூடுதலாக நிதி ஏற்றத்தாழ்வு இருந் தது. நிதி உடமையில் 42.7 % சமுதாயத்தின் உச்சியிலுள்ள ஒரு விழுக்காட்டினரிடமும், 50.3 % அவர்களுக்கு அடுத்தபடியாக உள்ள 19 விழுக்காட்டினரிடமும் இருந்தது. கீழ் நிலையிலுள்ள 80 விழுக்காடு மக்களிடம் இருந்ததோ 7% மட்டுமே என்று மார்க்சிய–பெரியாரிய ஆய்வாளர் எஸ்.வி. இராசதுரை, 2012 ஆகஸ்டில் வெளிவந்த சாட்சி சொல்ல ஒருமரம், என்ற நூலில் எழுதியுள்ளார். இந்த நிதி ஆதிக்கக் கும்பல்தான் அமெரிக்காவை மட்டுமன்றி உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. எனவே இது ஜனநாயக ஆட்சிஅல்ல பணநாயக ஆட்சியே ஆகும்.

நவம்பர் மாதம் அமெரிக்காவில் நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 600 கோடி டாலர் (32 ஆயிரம் கோடி ரூபாய்) செலவிடப்பட்டது. இப்பணத்தைக் கொண்டு இந்தியாவில் உள்ள 12 கோடிப் பள்ளிக் குழந்தைகளுக்கு மூன்றாண்டுகளுக்குப் பகல் உணவு அளிக்கலாம் என்று பி.சாய்நாத் கூறுகிறார்.

**தேர்தல் நடைமுறை:**

அமெரிக்காவில் குடியரசுத் தலைவருக்கான தேர்தல் நடக்கும்போது, பிரதிநிதிகள் அவை எனப்படும் மக்களவைக்கும் தேர்தல் நடைபெறுகிறது. மக்களவையின் மொத்த உறுப்பினர்கள் 435 பேர். மக்களவை பொதுவாகக் காங்கிரஸ் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் மாநிலங்கள் அவை இருப்பதுபோல, அமெரிக்காவில் மாநிலங்கள் அவைக்கு செனட் என்று பெயர். 100 உறுப்பினர்கள் கொண்ட அவை இது. ஆனால் இவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 33 செனட் உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெறும்.

நவம்பர் 6 அன்று தேர்தல் நாளில், குடியரசுத் தலைவர், 435 மக்களவை உறுப்பினர்கள், 33செனட்உறுப்பினர்கள். ஆகியவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு நடைபெற்றது.

குடியரசுத் தலைவருக்காகப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர், பராக் ஒபாமா,குடியரசுக்கட்சியின் வேட்பாளர் ரோம் மிட்னி ஆகிய இருவரின் தேர்தல் செலவு 200 கோடி டோலர். மக்களவை மற்றும் செனட் உறுப்பினர்களின் தேர்தல் செலவு 400கோடி டொலர். ஆக மொத்தம் 600 கோடி டாலர் (32ஆயிரம் கோடி ரூபா) பணத்தை அமெரிக்காவின் பெருமுதலாளியக் குடும்பங்களும், பெரும் நிதி நிறுவன முதலாளிகளும் தேர்தல்– அரசியல் நன்கொடையாகக் கொடுத்தனர். இவர்கள் கொடுத்த பணத்தைப்போலப் பலமடங்கு இலாபம் இவர்களுக்குக் கிடைக்கின்ற வகையில் செயல்படுவதே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஜனநாயகக் (பணநாயக) கடமையாகும்.

இந்தியாவிலோ நாடாளுமன்றம் – சட்ட மன்றங்கள்– உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களில் அமெரிக்காவைவிடப் பன்மடங்கு பணநாயகம் கோலோச்சுகின்றது. அமெரிக்காவில் வாக்காளர்களுக்கு நேரடியாகப் பணம்தரப்படுவதில்லை. இந்தியாவிலோ பணமும், சாராயமும், பிரியாணியும் இலவசங்களும் வாக்காளர்களுக்கு வாரி வாரி வழங்கப்படுகின்றன.

அமெரிக்காவில் குடியரசுத் தலைவரை மக்கள் நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. ஆனால், இது முழு உண்மை அல்ல. மக்களின் அதிக வாக்குகளைப் பெறும்வேட்பாளர் உறுதியாக வெற்றி பெறுவார். என்று கூறிவிட முடியாது. 2000 ஆம் ஆண்டுக் குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் அல்கோர் 5 கோடியே 10 இலட்சம் வாக்குகள் பெற்றார். ஆனால், குடியரசுக் கட்சியின் வேட்பாளர் புஷ் 5 கோடியே 5இலட்சம் வாக்குகள் பெற்றார். 5 இலட்சம் வாக்குகள் குறைவாகப் பெற்ற புஷ் குடியரசுத் தலைவராக வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு அமெரிக்காவின் பிரதிநிதித்துவத் தேர்தல் நடைமுறையே காரணமாகும்.

அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அம்மாநிலத்திலிருந்து பிரதிநிதிகள் (மக்கள்) அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் மற்றும் அம்மாநிலத்தின் மக்கள்தொகை ஆகியவற்றின் அடிப்படையில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான – அம்மாநிலத்திற்கான வாக்குகளின் எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை மாநிலத்தின் தேர்தல் அவை வாக்குகள் என்று கூறப்படுகின்றன. இதன்படி கலிபோர்னியா மாநிலத்துக்கு 55 வாக்குகள் உள்ளன. இதுதான் அதிக வாக்குகள் உள்ள மாநிலமாகும். அடுத்து டெக்சாஸ் 38, ஃபுளோரிடா 29, நியூயார்க் 29 என வாக்குகள் எண்ணிக்கை இருக்கிறது. 7 மாநிலங்களுக்கு 3 வாக்குகள் மட்டும் உள்ளன. இவ்வாறு 50 மாநிலங்களுக்கும் சேர்த்து 540 தேர்தல் அவை வாக்குகள் உள்ளன. வெற்றிபெறுவதற்கு 271 தேர்தல் அவை வாக்குகள் தேவை. கலிபோர்னியா மாநிலத்தில் ரோம்னியைவிட ஒபாமாவுக்கு மக்கள் கூடுதலாக வாக்களித்தனர். அதனால், தேர்தல் நடைமுறையின்படி, கலிபோர்னியா மாநிலத்திற்குரிய தேர்தல் அவை வாக்குகள் 55உம் ஒபாமாவுக்கு முழுவதுமாகக் கிடைத் தன. இவ்வாறு ஒபாமா பெற்ற மொத்த தேர்தல் அவை வாக்குகள் 303 ஆகும். மிட்ரோம்னி 24 மாநிலங்களிலும்அதிக வாக்குகள் பெற்றிருந்தனார். ஆயினும் அதிக எண்ணிக்கையில் தேர்தல் அவை வாக்குகள் உள்ள மாநிலங்களில், ஒபாமா அதிக வாக்குகள் பெற்றதால் ஒபாமாவுக்கும் (303) ரோம்னிக்கு (206 ) மிடையிலான வாக்குகள் எண்ணிக்கையில் வேறுபாடு ஏற்பட்டது. மொத்தம் பதிவான வாக்குகளில் ஒபாமாவுக்கு 50.3 விழுக்காடும், மிட்ரோமி னிக்கு 48.1 விழுக்காடும் கிடைத்தன. மிட் ரோம்னியை விட ஒபாமா 30 இலட்சம் வாக்குகள் மட்டுமே அதிகமாகப் பெற்றார்.

ஆனால், மக்களவையின் 435 இடங்களுக்கு நடந்த தேர்தலில் குடியரசுக் கட்சி 232 இடங்களையும் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி 191 இடங்களையும் மட்டுமே பெற்றன. மீதி 12 இடங்களை மற்ற கட்சிகள் பெற்றன. எனவே மக்களைவையில் பெரும்பான்மை பெற்றுள்ள குடியரசுக் கட்சியின் ஆதரவு இல்லாமல் ஒபாமா முதன்மையான முடிவுகளை எடுக்க முடியாது. செனட்டுக்கான தேர்தலுக்குப்பின், ஜனநாயகக் கட்சி 51 உறுப்பினர்களையும், குடியரசுக்கட்சி 45 உறுப்பினர்களையும் கொண்டுள்ளன.

**மக்கட் பிரிவினர்:**

வடஅமெரிக்காவில் மொத்த மக்கள் தொகை 32 கோடி. இவர்களில் 64 விழுக்காட்டினர் வெள்ளை இனத்தவர். ஸ்பானிஷ் மொழி இனத்தவரான– தென் அமெரிக்க நாடுகளிலிருந்து வட அமெரிக்காவில் குடியேறி வாழுகின்றவர்கள். ஹிஸ்பானிஸ் எனப்படுகின்றனர். இவர்கள் 16.6 விழுக்காடு உள்ளனர். ஆபிரிக்க–அமெரிக்க(கறுப்பின மக்கள்) 12.3 விழுக்காடு, ஆசிய அமெரிக்கா 5 விழுக்காடு, யூதர்கள் 2.1 விழுக்காடு என ஆக இவர்கள் மொத்தம் 36 விழுக்காட்டினர் அமெரிக்கக் குடிமக்களாக வாழ்கின்றனர்.

அமெரிக்காவில் 20 கோடி வாக்காளர்களில் 58 விழுக்காட்டினர் மட்டுமே வாக்களித்தனர். இந்தியாவில் வழக்கமாக ஏழைகளும் நடுத்தரப் பிரிவினரும் அதிக அளவில் வாக்களிக்கின்றனர். வசதி படைத்தவர்களில் பெரும்பாலோர் வாக்குச் சாவடிக்குச் செல்வதில்லை. ஆனால், அமெரிக்காவிலோ இதற்கு நேர் எதிரான நிலை இருக்கிறது.

அமெரிக்காவில் பணக்காரர்களில் 75 விழுக்காட்டினர் வாக்களிக்கின்றனர். ஏழைகளில் 40 விழுக்காட்டினர் மட்டுமே வாக்களிக்கின்றனர். (ஃபுரண்ட் லைன் நவெம்பர் 2,2012) அமெரிக்கப் பணக்காரர்கள் தங்கள் பணநாயக ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதிப்பாட்டுடன் உள்ளனர். இத்தேர்தல் கூத்துக்களால் தமக்கு நன்மை ஏதும் விளையாது என்கிற புரிதல் ஏழைகளிடம் மேலோங்கி நிற்கிறது.

(தொடரும்)

பொருளியல் நிபுணர் க.முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் மீதான அடக்குமுறைகளை உலகம் கவனத்தில் எடுக்காதது ஏன்?

## பிரான்ஸ் தமிழர் நடுவம் கேள்வி

(கொழும்பு)

கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தினுள் நுழைந்து மாணவர்களை அச்சுறுத்தியதுடன் மறுநாள் அவர்கள்மீது தாக்குதல் நடத்தி பின்னர் மாணவர்களை கைது செய்து தடுத்து வைத்திருக்கும் இலங்கை அரச படைகளின் நடவடிக்கைகளை வன்மையாக கண்டித்தும் மாணவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் பிரான்சிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களை உள்ளடக்கிய மாணவர் அமைப்புக்கள் மற்றும் பிரெஞ்சு அமைப்பு மற்றும் தமிழர் நடுவம் ஆகியன இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தனிமனித சுதந்திரத்தையும் தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் இலங்கை அரசு தொடர்ந்து நசுக்கி வருவதையும் தமிழ் மக்களை தொடர்ந்து அடிமைத்தனமாக நடத்துகின்றது என்பதையும் அறிக்கையில் சுட்டிக்காட்டுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் இறந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தும் தமது உரிமையை மேற்கொண்டபோது அரசு இராணுவத்தை கொண்டு அதனை தடுத்து மாணவர்கள் மீது தாக்குதல்களை நடத்தியிருப்பதையும் கைதுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டும் அறிக்கை மாணவர்கள் மீது முன்னைய ஆட்சியாளர்கள் மேற்கொண்ட அடக்குமுறையே ஆயுதம் தாங்கிய போராட்டமாக பரிணமித்ததையும் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

2009 ஆம் ஆண்டு ஒரு இனஅழிப்பு நடந்த போதும் அதற்கு பின்னரும் தொடரும் அடக்குமுறைகள் குறித்தும் உலகம் கவனம் எடுக்காமல் இருப்பது கவலையளிப்பதாக உள்ளது.

தமிழ் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இத்தகைய அடக்குமுறைகளைத் தட்டிக் கேட்க வேண்டியது மாணவர்களாகிய எமது பொறுப்பு எனவும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில் தமிழ் மக்கள் மீதான வன்கொடுமைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கெதிராக இன அழிப்பு நடந்தது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தும் அறிக்கை தமிழ் மக்களின் பிரதேசங்களில் இருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது.

குறித்த கூட்டறிக்கையானது பிரெஞ்சு அரசாங்கம் அரசியல் கட்சிகள், பல்கலைக் கழகங்கள், மாணவர் அமைப்புக்கள், பிரெஞ்சு ஊடகங்கள் என்பனவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## அதிகமான இரட்டைக் குடியுரிமை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன

(கொழும்பு)

ஒரு இலட்சத்திற்கு அதிகமான இலங்கையர்கள் இரட்டைக் குடியுரிமை கோரி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டு குடியுரிமை பெற்றுக்கொண்ட இலங்கையர்களே இவ்வாறு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் ஊடாக இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனினும் தமது கோரிக்கைக்கு திணைக்களம் சாதகமான பதில் எதனையும் அளிக்கவில்லை என வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் ஏற்கனவே இரட்டைக் குடியுரிமை அந்தஸ்து வகித்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு குடியுரிமை பெற்றுக் கொண்ட இலங்கையர்களுக்கு 30 நாள் விசாவே வழங்கப்படுகின்றது.

இதற்காக 50 அமெரிக்க டொலர் அறவீடு செய்யப்படுகின்றது.

விசா காலம் முடிவடைந்ததன் பின்னர் தங்கியிருந்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் புதிய சட்டதிருத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார். (அ-2)

## தமிழக மீனவர்கள் கடற்படையால் கைது

நாகையிலிருந்து 7 படகில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

இதேபோல் நாகை அக்கரைப்பேட்டையை சேர்ந்த 8 பேர் படகில் மீனவர்கள் கடலுக்கு சென்றனர். அவர்கள் கோடியக்கரை அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் அவர்களை கைது செய்துள்ளதுடன் மீனவர்களை தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இதேபோல் காரைக்கால் கிளியல்மேடு பகுதியை சேர்ந்த 18 மீனவர்களையும் 2 விசைப்படகுகளுடன் இலங்கை கடற்படையினர் துப்பாக்கி முனையில் சிறை பிடித்து கைது செய்து இலங்கை அழைத்து சென்றனர். மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட சம்பவம் மீனவ கிராமங்களில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுபோன்று தொடரும் சம்பவத்தை தடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## அரசின் செப்படி வித்தைகள் மார்ச் மாதத்தில் தெரியவரும்

### மாவை.எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பிலான உண்மைத் தன்மைகள் அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசு எந்தளவிற்கு அக்கறை காட்டி வருகின்றது போன்ற விபரங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நாவில் இடம்பெறும் மனிதவுரிமைகள் தொடர்பான கூட்டத்தொடரில் அனைவருக்கும் தெரியவரும் என மாவை.சேனாதிராஜா எம்.பி.தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அமைந்துள்ள பொது நூலகத்தில் 4 இலட்சம் ரூபா பெறுமதியான இணைய வசதியுடன் கூடிய கணனிக்கூடம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய அவர் ,

சர்வதேசத்தை ஏமாற்றும் நோக்குடன் இலங்கை அரசினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பிலான உண்மைத் தன்மைகள் அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசு எந்தளவிற்கு அக்கறை காட்டி வருகின்றது போன்ற விபரங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நாவில் இடம்பெறும் மனிதவுரிமைகள் தொடர்பான கூட்டத்தொடரில் அனைவருக்கும் தெரியவரும் எனவும் அரசுடன் இணைந்து எமது அதிகாரங்களை தட்டிப்பறிக்கின்றவர்களிடம் உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது என்றார்.


இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கூறுகையில்,

அரசாங்கம் தமிழர் தாயகத்தில் சமகாலத்தில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்தவொரு மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை எனவும் தமிழ் மக்களின் ஒவ்வொரு உரிமைகளையும் படிப்படியாக பறித்துவரும் அரசு யாழ்.பல்கலைக்கழகமாணவர்களின் கைதிகளினூடாக எஞ்சியுள்ள பெறுமதிமிக்க மூலதனமாக கல்வியையும் முடக்க முனைகின்றது என்றார்.

இதேவேளை பல்வேறு அரச சார்பு கைக்கூலிகளின் தடங்கல்களின் தடங்கலையும் தாண்டியதும் வெற்றிகரமான திறந்து வைக்கப்பட்ட இந்த இணைய நூலகமானது பளை மற்றும் பளையை அண்டிய பிரதேசங்களில் திறக்கப்படும் முதல் நூலகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான நிதியினை லண்டன் வோல்த்தமீஸ் ரோவ் கற்பக விநாயகர் ஆலய நிறுவுநர் கோபால கிருஷ்ணன் வழங்கியிருந்ததாக தெரியவருகின்றது. (அ-2)





மதுசாரத்திற்கு எதிரான இளைஞர் அணி மாநாடு நேற்று முன்தினம் நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தொடர்பான பயிற்சி பெற்ற இளைஞர் ஒருவருக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் ஆணைக்கு இந்திய அரசு பணிகின்ற காலம்

## இறையாண்மை எங்கே? விடுதலை சிறுத்தைகள் கேள்வி

(கொழும்பு)

சட்டப்படி அனுமதி பெற்று இந்தியாவுக்கு வந்து பொலிஸில் பதிவு செய்து தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்து இளைஞர்களை இவ்வாறு பொய் வழக்குகளிலே கைது செய்து ஒடுக்குமுறைகளை ஏவுவது மனித நேயத்திற்கு எதிரான கொடுஞ் செயலாகும்.

இத்தகைய போக்குகளை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது என தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக தொல். திருமாவளவன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையின் பிரகாரம் வருமாறு,

சென்னை பல்லாவரம் அருகே தங்கிவரும் ஈழத்தமிழ் இளைஞர்கள் 10 பேரை அண்மையில் தமிழக க்யூ பிரிவு உளவுத் துறையினர் திடீரெனக் கைது செய்து அவர்களில் நால்வரை மட்டும் பொய் வழக்கில் சிறைபடுத்தியுள்ளனர்.

மிகுதியான 6 பேரின் கதி என்ன என்று இதுவரை தெரியவில்லை. சிறைபடுத்தப்பட்டுள்ள நான்கு இளைஞர்களும் தமிழக அரசுக்கு எதிராகவோ அல்லது இந்திய அரசுக்கு எதிராகவோ எத்தகைய குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை என்று அதே உளவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கூறியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனாலும் அவர்கள் பொய் வழக்குகளில் சிறைபடுத்தப்படிருப்பது ஏன் என்று விளங்கவில்லை. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட ஏனைய 6 இளைஞர்களையும் இன்னும் ஏன் விடுவிக்கவில்லை என்பதும் தெரியவில்லை.

தமிழக பொலிஸாரின் இந்தத் திடீர் அதிரடி நடவடிக்கையின் பின்னணியில் இலங்கை அரசு இருப்பதாகத் தெரியவருகிறது. தமிழ் நாட்டில் சட்டத்திற்கு விரோதமாகவோ சமூகத்திற்கு விரோதமாகவோ எத்தகைய நடவடிக்கையிலும் ஈடுபடாத அந்த இளைஞர்களை திடீரெனக் கைது செய்திருப்பதற்கு வேறென்ன பின்னணியாக இருக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது. இலங்கை அரசின் ஆணைக்கிணங்கி செயற்படக் கூடிய அளவுக்கு இந்திய இறையாண்மையும் தமிழக அரசின் இறையாண்மையும் வலுவிழந்த நிலையில் இருக்கிறதோ என்கிற கவலையே எழுகிறது.

மேலும் விசாரணை என்ற பெயரால் அடைக்கலம் தேடிவந்து அகதிகளாய் வாழும் மக்களை அச்சுறுத்துவது அகதிகள் தொடர்பான சர்வதேசச் சட்ட விதிகளுக்கு எதிரானதாகும். தமிழக மற்றும் இந்திய அரசுகளின் இத்தகைய போக்குகளை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

பொய் வழக்கில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் நால்வரையும் உடனடியாக விடுதலை செய்வதுடன் விசாரணை என்ற பெயரால் கடத்தப்பட்ட 6 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் தமிழக அரசை கேட்டுக் கொள்வதுடன் ஈழத் தமிழர்களை அச்சுறுத்தும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் எனவும் விடுதலைச் சிறுத்தைகள் வற்புறுத்துகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## 23 அகதிகள் மனுஸ்தீவுக்கு

(கொழும்பு)

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் 23 பேர் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்த 29 புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வாறு மனுஸ் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் 23 பேர் இலங்கை புகலிடக்கோரிக்கையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக இவ்வாறு புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவர் என அவுஸ்திரேலிய குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் என்ன பயன்?

### கேள்வியெழுப்புகிறார் பிரதிக் கல்வி அமைச்சர்

(கொழும்பு)

உயர்தர மற்றும் சாதாரணதரப் பரீட்சை உரிய முறையில் வெற்றிகரமாக நடத்த முடியாவிட்டால் பரீட்சை ஆணையாளரின் பயன் என்ன என பிரதி கல்வி அமைச்சர் விஜிதமுனி சொய்சா கேள்வி எழுப்பியுள்ளார்.

யதகனாவ ரஜமஹ விஹாரையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

2012 ஆம் ஆண்டுக்கான சாதாரண தர பரீட்சையின் விஞ்ஞானம் பகுதி I வினாத்தாளை இரத்து செய்து மீள பரீட்சை நடத்த வேண்டும் அல்லது முன்கூட்டியே வெளியான வினாக்களுக்கு சகல மாணவர்களுக்கும் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

பணம் கொடுத்து பரீட்சைக்கு முன்னர் வினாக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய சாத்தியம் காணப்படுவது கிராமிய மாணவர்களுக்கு பாதகத் தன்மையை ஏற்படுத்தும் என பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2-9)

## உள்ளூ. தேர்தல் சட்டம் தொடர்பில் ஆராய தொகுதி மறுசீரமைப்புக்குழு

புதிய உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டம் தொடர்பில் ஆராய்வதற்கான தேசிய தொகுதி மறுசீரமைப்பு குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்து பேர் கொண்ட இந்த குழுவை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஏ.எல்.எம். அதவுல்லா நியமித்துள்ளார். அதன் தலைவராக ஜெயலத் ஆர்.வீ.திஸாநாயக்க செயற்படுவதுடன் அந்தக்குழுவில் வி.எச்.ஜீ. பிரேமசிறி, விமல் ரூபசிங்க, ஏ.எம். நெஹ்யா மற்றும் தேவராஜ், ஆதவன் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் சீர்த்திருத்தப்பட்ட உள்ளூராட்சி சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனை வலுப்படுத்தும் வகையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சட்டமூலத்தின் கீழ் விருப்பு வாக்குமுறைமை இரத்து செய்யப்படும்.

இந்நிலையில் இந்த சட்ட மூலம் தொடர்பில் பொது மக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் கருத்துக்களை பெற்று குறித்த குழு அறிக்கையொன்றை வெளியிடவுள்ளது.

அறிக்கை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது

அடுத்த வருடம் முதலாவது நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைக்குமாறு கோரிக்கை.

அடுத்த வருடம் முதலாவது நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைக்குமாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் இடதுசாரி கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அரசியல் யாப்பு மற்றும் நீதிமன்றத்துக்கு இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தணித்துக் கொள்ளும் வகையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண, கம்யூனிச கட்சியின் தலைவர் அமைச்சர் டியூ.குணசேகர மற்றும் ஜனநாயக இடதுசாரிகள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

இதன்மூலம் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பில் எழுந்துள்ள முரண்பாடுகளையும் தீர்த்துக் கொள்ளக்கூடியதாகவிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தை கவிழ்ப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரே இலக்காக இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார். இதன் பொருட்டு ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஜோன் மைக்கல் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

பிரதம நீதியரசருக்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு சாதாரண மனிதரை போன்றேனும் மதிப்பளிக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

## உத்தேச வரவு செலவுதிட்டம் ஏகமனதாக நிறைவேற்றம்


(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபையின் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுத்திட்டம் நேற்று சபையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபையின் உபதலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நகரசபையின் தலைவர் சுகயீனம் காரணமாக சமுகமளிக்காத நிலையில் உபதலைவரின் தலைமையில் சபை கூடி 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் தொடர்பில் விவாதம் இடம்பெற்றதன் பின்னர் உத்தேச வருமானம் 158 மில்லியன் 9 இலட்சத்து 41 ஆயிரத்து 179.46 ரூபாவாகவும் மொத்த செலவாக 158 மில்லியன் 9 இலட்சத்து 41 ஆயிரத்து 151.50 ரூபாவாகவும் கொண்டமைந்த உத்தேச வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்தார்.


இம்முறையும் பல வீதிகள் புனரமைப்பு, பூங்கா புனரமைப்பு நூலக அபிவிருத்தி,பொது மலசல கூட வசதிகள் என்பன உள்ளடங்கியதாக வரவு செலவுத்திட்டம் அமைந்துள்ளது எனவும் தெரிவித்தார். (அ-9-266)






யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வருடாந்த இளைஞர் பரிசளிப்பு விழா அண்மையில் திருமுறை மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இளைஞர் மன்றத்தினால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி சான்றிதழ் வழங்குவதையும் மாணவிகளின் கலைநிகழ்வையும் விருந்தினர்கள் உட்பட நிகழ்வில் கலந்து கொண் டவர்களினையும் படங்களில் காணலாம். (படங்கள் என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## எம்முள்ளத்தை இறைவனிடம் ஒப்படைப்போம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயேசுபிரான் பெத்லகேம் என்ற சிற்றூரில் பிறந்தபொழுது கீழைத்தேசங்களிலிருந்து மூன்று வானசாஸ்திரிகள் அவரைப் பணிந்துகொள்ளச் சென்றனர். இவர்கள் இயேசுபிரான் ஓர் அரண்மனையில் தான் பிறந்திருப்பார் என்று எண்ணி ஏரோது ராஜாவின் அரண்மனைக்குச் சென்று,

*யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?*
*கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு*
*அவரைப் பணிந்து கொள்ள வந்தோம்*

என்றார்கள்.

பின்னர் சாஸ்திரிகள் இயேசு பாலனை ஒரு மாட்டுத் தொழுவத்தில் கண்டு, தாம் கொண்டு வந்த பரிசில்களை அவருக்கு வழங்கி, அவரை சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தார்கள்.

அவர்கள் வழங்கிய பரிசில்கள் இயேசுபிரானுடைய வாழ்வையும் பணியையும் முற்குறிப்பனவாக இருந்தன.

அவர்களின் காணிக்கை, பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் என்பனவையாகும். பொன் அவர் ஒரு மன்னராகிப் பூமியை ஆட்சி செய்வார் என்பதற்கு முன்னறிவிப்பாகும். தூபவர்க்கம் அவர் ஓர் ஆசாரியனாக, மக்களின் பிரார்த்தனைகளை முன்னடத்துவார் என்பதனைக் குறித்தது. வெள்ளைப்போளம் இறந்தவர்களுக்கு உடலில் வைக்கப்படும் பண்டமாகும். இது இயேசுபிரான் என்றைக்கோ ஒரு நாள் உலகத்தாரின் பாவங்களுக்காக மரிப்பார் என்பதற்கு முன்னடையாளமாகும்.

இன்று இயேசுபிரான் பரிசிலாகக்கேட்பது நம்முடைய உள்ளத்தைத்தான். பயம் என்னும் பேய்தனை விரட்டி, பொய்மைதனை அறவே நீக்கி, பழிவாங்குதல் என்னும் கொடிய எண்ணத்தை அகற்றி, அன்பு, சந்தோஷம், சமாதானம், தயவு என்பவற்றால் நிறைந்த உள்ளத்தையே அவர் வேண்டி நிற்கின்றார்.

இதனை விபுலானந்த அடிகள் பாடிய பாடல் ஒன்றினால் விளக்கலாம்.

*வெள்ளை நிற மல்லிகையோ*
*வேறெந்த மாமலரோ*
*வள்ளல் அடியினுக்கு வாய்த்த*
*மலரெதுவோ?*
*வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த*
*மலருமல்ல*
*உள்ளக்கமலமடி உத்தமனார்*
*வேண்டுவது*

கிறிஸ்மஸ் தினத்தில் எம்முள்ளத்தை இறைவனுக்கு ஒப்படைத்து குதூகலம் அடைவோமாக.

எஸ்.ஜெபநேசன்,
முன்னாள் பேராயர்,
தென்னிந்திய திருச்சபை.



## நிரந்தர சமாதானம் நீடித்து நிலைக்கட்டும்!

நாம் வாழும் பூமி எமக்கென்றே வாக்களிக்கப்பட்டது என்றும் எமது மக்களின் மனங்களில் நித்திய மகிழ்ச்சியும் எமது வாழ்விடங்கள் தோறும் நிரந்தர சமாதானமும் நீடித்து நிலவ வேண்டும் என்றும் ஈ.பி.டி.பி (ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி) யின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நத்தார் தினத்தை யொட்டிய தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கருணை மைந்தன் இயேசுபாலன் பிறப்பெடுத்த நத்தார் தினத்தை கொண்டாடி மகிழும் மக்களின் மனங்களில் நாம் நம்பிக்கை ஒளியினை மேலும் வலுப்படுத்த விரும்புகின்றோம்.

நாம் சொல்லும் கருத்துக்கள் சத்திய வாக்குகள் போன்றவை. அவை என்றும் தோற்பதில்லை. எமது தீர்க்க தரிசனங்களும் அதை அடைவதற்காக உண்மை வழி ஊடாக நாம் செல்லும் பயணமும் நம்பிக்கை தரும் வல்லமை படைத்தவை.

கடந்துபோன காலங்களில் கற்பாறைகளில் விதைக்கப்பட்ட விதைகளாகவே எமது மக்களின் சமாதான விருப்பங்கள் நிறைவேறாத ஆசைகளாக முடங்கிப் போயிருந்தன.

ஆனாலும் துயரங்களை மட்டும் சந்திருந்த எமது மக்களுக்கு இனியதொரு சமாதான சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வலிபட்டு, வதைபட்டு, வருத்தப்பட்டு உருவாக்கப்பட்டதே இந்த சமாதான சூழல். இதை நாம் அனைவரும் பாதுகாக்க வேண்டும்.

இனிவரும் காலம் நல்ல கனிதரும் மரங்களை உருவாக்கும் காலம் என்ற எதிர்கால நம்பிக்கையோடு மலர்ந்திருக்கும் சமாதான சூழலை எமது மக்கள் இன்னமும் அதிகமாக விசுவாசிக்க முன்வர வேண்டும்.

எமது மக்களாகிய உங்களோடு நாமும் சேர்ந்து பாரச் சுமைகளை சுமக்கின்றோம். எங்கள் முதுகு வலித்தாலும் நிரந்தர சமாதானத்தை நோக்கிய எமது இலட்சியப் பயணம் நின்று விடாது.

நாம் விரும்பும் சமாதானம் என்பது சமவுரிமை சுதந்திரத்துடன் சேர்ந்ததே. அதற்கு நாம் விசுவாசம் உள்ளவர்களாக என்றும் இருக்க வேண்டும்.

நாம் அனைவரும் நியாயம் உள்ளவர்களாகவும் நீதிச் சட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் என அவர் தனது நத்தார் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



## சமாதானமே சிறந்த பரிசாக அமையட்டும்!

பொதுவாக நத்தார் திருநாளில் அனைவரும் பழையன வற்றை மறந்து நிகழ்காலத்தைப் பற்றி சிந்திப்பார்கள். இந்த நத்தார் பெருநாளில் செல்வச் சிறார்கள் நத்தார் பாப்பாவிடம் தமக்குத் தேவையானவற்றை கேட்டுப் பெற்றுக் கொள் வார்கள். அதற்குரிய கிரயத்தை பெரியோர் செலுத்துவார்கள். நத்தார் திருநாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந் நன்நாளை கொண்டாடுவது வழக்கமாகும்.

கிறிஸ்து திருமகனின் பிறப்பை நினைவூட்டுவது நத்தார் திருநாளாகும். உலகின் கண் சமாதானம் விடிகின்றது என்பதை நத்தார் திருநாள் சுட்டிக்காட்டுகின்றது. இந்த தேசத்தில் இருக்கின்ற அனைவரும் எவ்வித கிலேசமுமின்றி நத்தாரை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

அவர்களுடைய அபிலாசைகள் நிறைவேற்றப்படுகின்றன. இன்றைய நிலைமையை மனப்பூர்வமாக வரவேற்கும் வடமாகாண மக்கள் அரசாங்கமும் மேதகு ஜனாதிபதி அவர்களும் தமது எதிர்காலத்தை சிறப்பாக அமைக்க உதவி புரிவார்கள் என்று ஆழ்ந்த நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டுள்ளார்கள்.

இந்த நத்தார் திருநாளுக்கு தங்களுக்கு சமாதானமே சிறந்த பரிசாக அமையட்டும். நத்தார் பெருநாளின் சக்தி தங்களுக்கு சமாதானத்தை நல்குவதாக. இந் நன்னாளின் சந்தோஷம் தங்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாக அமையட்டும்.

**இப்பெருநாள் தங்களுக்கு அன்பை நல்குவதாக**
**தங்கள் அயலவர்கள் தங்களை நேசிப்பவர்களாக**
**தொந்தரவுகள் தங்களை அணுகாதிருக்கட்டும்**
**தேவதைகள் தங்களை பாதுகாப்பார்களாக**
**தேவலோகம் தங்களை அன்புடன் வரவேற்கட்டும்**

இத்தேசத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நத்தார் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். தங்களுக்கு மிகவும் சந்தோஷகரமான நத்தார் பெருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**ஜி.ஏ.சந்திரசிறி, ஆளுநர், வடமாகாணம்.**

### பாலனே யேசு கிறிஸ்து

அகிலம் போற்றும்
அன்னை மேரியின்
வயிற்றிலே வந்துதித்த
அன்பு இயேசுவே....!

பாவமறியா பரமனவர்
பாமரர்களைக் காத்திடவே
பலிப்பொருளாய் ஆனாரே
எம் இயேசு பாலனே...!

மக்கள் மனங்களிலே
குடிகொண்ட இரட்சகரே
மாசற்ற மாணிக்கமாய்- மரத்தின்
சிலுவையிலே மரித்தவரே...!

மக்களை வாழவைக்கவே
மனித சாயலான
நம் இயேசுவே- அவர்தான்
மனித குமாரனாம் இயேசு கிறிஸ்து



பா.ரூபன்,
அல்வாய்

### யேசு எந்தன் குழந்தையே...!

யேசு எந்தன் குழந்தையே
இன்பமான ரட்சகரே
பாசமான உள்ளத்தில்
பாவந் தீர்க்கும் பாலனே...

உலகிலுள்ளோர்க்கு சூரியன்
ஊனமுற்றோர்க்கு உறவினன்
விண்ணையும் மண்ணையும்
விரும்பிக் காக்கும் பாலனே...

அன்னை புனித மரியாளின்
அருமைப் புதல்வனே...
அருமையான முறையில்
அனைத்துயிரையும் காத்திடும் பாலனே...

யேசு எந்தன் பாலனே...
எல்லா இன்பமும் தந்து
எம்மைக் காத்திடு பாலனே...

பா.மதனபாரதீ, அல்வாய்

### உலகிற்கோர் ஒளியானார்

உலகமே குளிர்தனில் உறைகின்ற பொழுது
உலகினில் ஒளியாய் இறைமகன் பிறந்தார்
பலமொடு சுமந்து பாலகன் பேறினை
புலமிருள் வேளையில் பெற்றவர் மேரி
நிலமுயர் கோபுர நெடுங்கடல் ஒளிபோல்
நலமொடு நிதமெழ நல்லருள் பொழிவார்
துலங்குமெம் திருமகன் திருநாளே இந்நாள்
தலமொளிர் மெழுகினில் தொழுவோமே வாரீர்

*கலைப்பரிதி* கே.ஆர்.திருத்துவராஜா

### அருள் மாரி பொழிந்திருவாய்

அன்னை மரி கருவினில் அவதரித்து
மார்கழி மாதத்தில்
மாட்டுத் தொழுவத்தில்
வந்துதித்த பாலனே!

தேவி மரியாள்
அணைத்திருக்க
வானதூதர் வாழ்த்துடன்
விடிவெள்ளியாய் விண்ணவனே வந்துதித்தாயோ!

அன்பின் வார்த்தையை
இலக்கணமாக்கிய
உத்தமனே!
எம் பாவங்களை
தீர்த்து
அருள்மாரி பொழிவாயோ
ஆனந்தமாய் வாழ்வதற்கு



சிந்து சிவதாஸ், சுதுமலை

### ஆசிர்வதிப்பாயாக!

அன்னை மேரியின் இணையில்லா மழலை
மாட்டுத் தொழுவத்தில்
மானிடராய் வந்துதித்த- உத்தமன்

நூறாயிரம் கோடி யானைகள்
சுமக்கக்கூடிய சிலுவையினை
குருதி சொட்டச் சொட்ட
செந்தாமரை மலர்போல் தன்
உடம்பிலே தாங்கிய -குருநாதர்

மக்கள் துயர் தீர்த்த
ஆண்டவரே நீர் மலர்ந்த - இந்
நன்நாளிலே எமையெல்லாம்
ஆசிர்வதிப்பாயாக!

பாரதிதாசன் சத்யா,
அல்வாய்


**ரஞ்சிற் மோட்டோர்ஸ்**
யாழ்.வீதி, மானிப்பாய்.

RAMCO CEMENT
**ஈஸ்வர பகவான் அன் கம்பனி**
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**எஸ்.பீ.என்.மோட்டோர்ஸ்**
145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**கிருபா லேணர்ஸ்**
தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

HOLCIM CEMENT
**ஸ்ரீ ரங்கன் என்ரப்பிறைஸ்**
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**கஜமுகன் ஹாட்வெயர்**
147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை; தீர்வு காண்பதற்கு மத்திய அரசு விருப்பம்

## அமைச்சர் நாராயணசாமி

(சென்னை)

டில்லியிருந்து சென்னை வந்த மத்திய இணையமைச்சர் நாராயணசாமி சென்னை விமான நிலையத்தில் இருந்து தமிழகம் குறித்த தன்னுடைய கரிசனையை வெளிப்படுத்தினார்.

நேற்று முன்தினம் நண்பகல் விமானம் மூலம் சென்னை வந்த நாராயணசாமி விமான நிலையத்தில் அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவது மிகவும் கவலையளிக்கும் விடயம். இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு விரும்புகிறது. எனவே இது பற்றி இருநாட்டை சேர்ந்த மீனவ அமைப்புக்கள் சந்தித்து பேசினால் தீர்வு ஏற்படும்.

மத்தியவெளியுறவுத்துறைஅமைச்சகம் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. தமிழக மீனவ அமைப்பினரை இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வைப்பதற்காக தமிழக அரசிடம் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் முறைப்படி தகவல் தெரிவித்துள்ளது.

ஆனால் தமிழக அரசிடம் இருந்து இதற்கு முறையான பதில் வரவில்லை. எனவே இந்த பேச்சுவார்த்தை நடப்பதில் தாமதம் ஏற்படுகிறது. தமிழக மீனவர்களின் நலன் கருதி உடனடியாக இந்த பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

காவிரி நடுவர் மன்ற உத்தரவை அரசு இதழில் வெளியிட வேண்டும் என்று தமிழக முதல்வரிடம் இருந்து வந்துள்ள கடிதத்தை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. ஆனால் மத்திய நீர்வளத்துறைதான் இது பற்றி முடிவெடுக்க முடியும்.

அவர்கள் விரைவில் முடிவெடுப்பார்கள் என நம்புகிறேன். டில்லியில் மருத்துவ மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோன்ற சம்பவம் இனிமேல் நடக்காமல் இருக்கவேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது. (அ)

# இத்தாலியில் தேர்தல்

(ரோம்)

இத்தாலிய பாராளுமன்றம் கலைக்கப்பட்டு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலானவை தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கின்றன. இந்நிலையில் இத்தாலிய ஆளும் கட்சிக்கு முன்னாள் பிரதமர் பெர்லோஸ்கோனியின் கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொண்டுவிட்டது.

இதையடுத்து கடந்தவாரம் இத்தாலிய பாராளுமன்றில் அவசரமாக வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. பிரதமர் மரியோ மோன்டி தன் இராஜினாமா கடிதத்தை அந்நாட்டு ஜனாதிபதி ஜோர்ஜியோ நெப்போலிடானோவிடம் அளித்தார்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய உத்தரவில் கையெழுத்திட்ட ஜனாதிபதி ஜோர்ஜியோ வரும் பெப்ரவரி மாதம் தேர்தல் நடக்கும் வரை பிரதமர் பதவியில் மரியோ மோன்டியை தொடரும்படி கூறியுள்ளார். (அ-2)

# செங்கல்பட்டு சிறப்பு முகாமில் 7 தமிழர்கள் உண்ணாவிரதம்

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகள் 7 பேர் தங்களை விடுதலை செய்யக்கோரி நேற்று முன்தினம் முதல் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். கியூ பிரிவு பொலிஸாரால் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட ஈழத் தமிழர்கள் 41பேர் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தங்களை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய அதிகாரிகள் அவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்ததை அடுத்து போராட்டத்தை கைவிட்டனர்.

எனினும் பேச்சுவார்த்தைக்கு பின்பு 45 நாட்கள் ஆகியும் தங்களை விடுவிக்க அதிகாரிகளால் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாத நிலையில் மீண்டும் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி ஈழத் தமிழர்கள் தவதீபன், காண்டீபன், ஜான்சன், சௌந்தரராஜன், நந்தகுமார், செல்வராஜ், சசிகுமார் ஆகிய 7 பேரும் நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதத்தைத் தொடங்கியுள்ளனர்.

முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஏனைய ஈழத்தமிழர்களும் தங்களுக்கு ஆதரவு தெரிவிக்கப் போவதாக தெரிவித்துள்ளதாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (அ-2)

# பொலிஸாரின் உச்சக்கட்டுப்பாட்டில் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில்

## கோவிலைச்சுற்றி 144 தடை

(சென்னை)

சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோவிலைச் சுற்றி 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



தந்தை பெரியார் தி.க.வினரின் கருவறைக்குள் நுழையும் போராட்டத்தையடுத்து பொலிஸ் இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

மயிலாப்பூரில் கபாலீஸ்வரர் கோவில் கருவறைக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதால் ஆர்ப்பாட்டம் செய்த தந்தை பெரியார் திராவிட கழத்தினர் கைது செய்யப்பட்டனர்.

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக்கப்பட வேண்டுமென்றும் இதற்காக அரசியலமைப்பு திட்டத்தை திருத்தம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியும் பெரியார் தி.க.வினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து மயிலாப்பூரில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பெரியார் திராவிட கழகத்தினரின் இந்த போராட்டத்திற்கு இந்து அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இதேவேளை தி.கவினருக்கு எதிராக பா.ஜ.கவினர் ஆலய பாதுகாப்பு போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தலிபான் தளபதியை இளவரசர் கொன்றார்

ஆப்கானிஸ்தானில் நேட்டோ கூட்டுப்படையில் பணியாற்றிய பிரிட்டிஷ் இளவரசர் ஹரி தலிபான் தளபதி ஒருவரை கொன்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டிஷ் இளவரசர் ஹரி றோயல் விமானப் படையில் விமான மோட்டியாக பயிற்சி பெற்றவர். ஆப்கானிஸ்தானில் பணியில் ஈடுபட்டுள்ள பிரிட்டன் படையில் இவர் இடம்பெற்றுள்ளார்.

தலிபான்களை ஒடுக்கும் பணியில் ஹெல்மான்ட் மாகாணத்தில் இவர் கடந்த ஒக்டோபர் மாதம் ஈடுபட்டிருந்தார். பிரிட்டன் விமானப் படையின் அப்பாச்சி ரக உலங்கு வானூர்தியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த ஹரி, ஏவுகணை ஒன்றை ஏவி தலிபான் தளபதி ஒருவரை கொன்றார் என பிரிட்டன் பத்திரிகைகள் தற்போது செய்தி வெளியிட்டுள்ளன. (அ-2)

# விண்வெளிக்கு சுற்றுலா செல்ல முற்பதிவுகள் நடைபெறுகின்றன

பொதுமக்களை விண்வெளிக்கு சுற்றுலா அழைத்து செல்வதாக அமெரிக்காவின் ரிச்சாட் பிரான்சன் விமான நிறுவனம் முன்னர் அறிவித்திருந்தது.

அதற்கான கட்டணம் தலா ஒரு கோடியே 10இலட்சம் ரூபா என நிர்ணயிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விண்வெளிக்கு சுற்றுலா செல்ல ஏராளமானவர்கள்முன்பதிவுசெய்தனர்.

இதையடுத்து புதிய விசேட விண்கலம் தயாரிக்கப்பட்டது. அதிவேக சக்தி கொண்ட கலப்பின எந்திரத்தில் உருவாக்கப்பட்ட இந்த விண்கலத்தில் 2 விமானிகள் மற்றும் 6 பயணிகள் என 8 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும்.

இந்த விண்கலத்தின் சோதனை ஓட்டம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள மொஜாவ் விண்வெளி மையத்தில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டதாக அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-2)




பீகார் மாநில தலைநகர் பாட்னாவில் உள்ள இந்தியன் இன்ஸ்டியூட் ஒவ் டெக்னாலஜியின் முதலாமாண்டு பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் பட்டம் வழங்குவதை படத்தில் காணலாம்.

# டில்லியில் பனிமூட்டம்; விமான சேவை பாதிப்பு

டில்லியில் நேற்று கடுமையான பனிமூட்டம் இருந்ததன் காரணமாக விமான சேவை இடைநிறுத்தப்பட்டது.

காலை 7 மணியில் இருந்து 9 மணிவரை கடுமையான பனிமூட்டம் காணப்பட்டது. இதனால் 50 உள்ளூர் மற்றும் சர்வதேச விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

கடுமையான பனி காரணமாக 35 விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன. சில சர்வதேச விமானங்கள் ஜெய்ப்பூர் விமான நிலையத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டன.

பனிமூட்டம் காரணமாக டில்லியில் நேற்று முன்தினம் 100 விமான சேவை பாதிக்கப்பட்டது.

இதேபோல கடும் பனி காரணமாக புகையிரத சேவையும் பாதிக்கப்பட்டது. பல புகையிரதங்கள் தாமதமாக இயக்கப்பட்டு வருகின்றன. (அ-2)

# வானளாவிய அதிகாரத்துடன் எகிப்திய ஜனாதிபதி முர்ஷி

(கெய்ரோ)

எகிப்தில் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கும் அரசியல் சட்டத்தின் மீது நடந்த வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக 71 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர்.

எகிப்தில் ஜனாதிபதி முகமது முர்ஷி தனக்கு வானளாவிய அதிகாரம் அளிக்கும் வகையில் புதிய அரசியல்சட்டமசோதாவை கொண்டு வந்தார். இதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் குதித்தன.

இதையடுத்து [illegible] மக்கள் கருத்து அறி[illegible] பத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதிலும் முறைகேடுகள் நடந்ததாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. ஜனாதிபதி முர்ஷி தன்னிடத்தில் அதிகாரத்தை குவித்துக் கொள்ள நினைப்பதாகவும் முந்தைய அரசு போல சர்வாதிகாரமாக நடந்து கொள்ள பார்ப்பதாகவும் குற்றம் சாட்டி தினமும் போராட்டத்தை நடத்தி வருகின்றன.

இந்நிலையில் 2ஆம் கட்டமாக நடந்த இறுதி வாக்கெடுப்பில் 71.4 சதவீதம் பேர் புது சட்டத்துக்கு ஆதரவு அளித்துள்ளனர். வாக்கெடுப்பு [illegible] ட்சியின் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். (அ-2)

# பாலியல் குற்றங்களில் புதுடில்லிக்கு முதலிடம்

## உள்துறை அமைச்சு தகவல்

(புதுடில்லி)

டில்லி, மும்பை, பெங்களூர், சென்னை, ஐதராபாத் மற்றும் கொல்கத்தா ஆகிய 6 பெரு நகரங்கள் இந்தியாவில் உள்ளன. அவை மெட்ரோ நகரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இவற்றில் கடந்த 2011-2012 வரை உள்துறை அமைச்சகம் எடுத்துள்ள புள்ளிவிபரத்தின்படி 453 பாலியல் பலாத்கார வழக்குகள் பதிவு செய்யப்பட்டு டில்லி முதலிடம் பெற்றுள்ளது என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

அதைத் தொடர்ந்து மும்பையில் 221 பாலியல் வழக்குகளும் பெங்களூரில் 97, சென்னை 76, ஐதரபாத் 59 மற்றும் கொல்கத்தாவில் 46 வழக்குகளும் பதிவாகி உள்ளன. மேலும் கடந்த 2010 மற்றும் 2009களில் டில்லியில் மட்டும் முறையே 414மற்றும் 404 பலாத்கார வழக்குகள் பதிவாகி உள்ளன.

கடந்த 2010இல் மும்பையில் 194, பெங்களூரில் 65, சென்னையில் 47, ஐதராபாத்தில் 47 மற்றும் கொல்கத்தாவில் 32 பாலியல் பலாத்கார வழக்குகளை பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

இதுமட்டுமல்லாது சிறுமிகள் மற்றும் பெண்கள் சில்மிஷம் செய்யப்பட்ட வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதிலும் 6 மெட்ரோக்களில் டில்லி கடந்த 2011-12 ஆம் ஆண்டு 556 வழக்குகள் பதிவு செய்து முதலிடத்தை தக்க வைத்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நாம் ஆக இருப்போம். -அன்னை திரசா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com


# யாழ்.கட்டளைத் தளபதிக்கு ஓர் அவசர மடல்

யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதிக்கு நேற்றைய தினம் எழுதிய அவசர கடிதத்தின் தொடர்ச்சி இது....

அரசு புலிகளுடன் நடத்திய போரில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்றால் -தன் சகோதரனை -தன் தந்தை, தாயை, பிள்ளையை இழந்தவன் வேதனை எப்படி? இருக்கும்.

இழப்பு என்றால் அதிலும் சிங்கள -தமிழ் வேறுபாடு உண்டென்று படைத்தரப்பு நினைக்குமாக இருந்தால் தயவு செய்து அதனை மாற்றிக் கொள்வது நல்லது.

உங்களுக்கு சமாதானத்திற்கான விருது கிடைத்தபோது, யாழ்ப்பாணம் கத்தோலிக்க பாதுகாவலன் மண்டபத்தில் ஒரு விழா நடந்தது.

அந்த விழாவில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர், நல்லை ஆதீன முதல்வர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சமாதானம் என்ற ஒரே காரணத்தாலேயே தமிழ் இனம் சார்ந்த சமயத் தலைவர்களும் அந்த நிகழ்வில் பங்கேற்று உங்களைப் புகழ்ந்து பேசினர்.

அதே விழா வன்னிப் போரில் படையினர் பெற்ற வெற்றிக்கானதாக இருந்தால், இவர்கள் யாருமே வருகை தந்திருக்க மாட்டார்கள்.

எனவே இதிலிருந்து சமாதானம் மட்டுமே எல்லா இனங்களையும் ஒன்றிணைக்க வல்லது என்பது நிரூபணமாகின்றது.

ஆகவே, தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள சமயத் தலைவர்களை அழைத்து அவர்களுடன் நீங்கள் கதைத்து அவர்களின் கருத்தைக் கேட்க வேண்டும்.

நல்லை ஆதீன முதல்வர், யாழ்.மறைமாவட்ட ஆயர், சர்வதேச இந்து குருமார் ஒன்றியம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர், சின்மயாமிசன் சுவாமிகள் உள்ளிட்ட சமயத் தலைவர்களை அழைத்து அவர்களுடன் கதைத்து அவர்கள் முன்னிலையில் மாணவர்களை விடுதலை செய்யுங்கள்.

மாணவர்களை விடுதலை செய்வதன் மூலம் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் மீண்டும் இயங்கும்.

இதன்மூலம் ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்த முடியும்.

தாங்கள் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாகப் பதவியேற்ற பின்னர் பொதுமக்களின் நலன்கருதி வீதித் தடைகளை அகற்றிய செயல்களை மக்கள் நன்றியோடு நினைவுகூருகின்றனர்.

ஆகையால், யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் குடாநாட்டின் சமயத் தலைவர்களுடன் சந்திப்பை நடத்தி பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள்.

யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி என்ற அதிகாரத்தின் கீழ் இதனை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு இக்கடிதத்தை நிறைவு செய்கிறோம்.

# பிரதம நீதியரசரை தரக்குறைவாக நடத்தவில்லை- அமைச்சர் ராஜித

குற்றப்பிரேரணை தொடர்பான விசாரணைகளின்போது பிரதம நீதியரசரை அகௌரவப்படுத்தும் வகையில் எந்தவித செயற்பாடுகளையும் பாராளுமன்ற தெரிவுக்குழு மேற்கொள்ளவில்லை என்று அமைச்சர் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும் வேளையில், பிரதம நீதியரசர் தரக்குறைவாக நடத்தப்பட்டார் என்ற குற்றச்சாட்டை அமைச்சர் ராஜித சேனாரத்ன முற்றாக நிராகரித்துள்ளார். பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் எழுத்து மூலம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவை மிகத் தீவிரமான குற்றச்சாட்டுக்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்கள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் யாப்பிற்கு இணங்கவே பாராளுமன்ற தெரிவுக்குழு இந்த விசாரணைகளை மேற்கொண்டது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தக்குற்றப்பிரேரணை செயற்பாட்டை சில சக்திகள் அரசியல் மயப்படுத்த முயற்சிக்கின்றன. விசாரணைகளின்போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவுக்கு மேலும் 15 வங்கிக் கணக்குகள் இருந்ததாகவும் அவை தொடர்பில் அவரது வருடாந்த சொத்து பிரகடன அறிக்கையில் குறிப்பிட்டிருக்கவில்லை என்று அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார்.



பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முக்கிய உறுப்பினராக அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# யாழ்.போதனா வளாக இந்து ஆலய கும்பாபிஷேகம்

யாழ்.போதனா வைத்தியசாலை வளாக ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சமேத ஞானவைரவர் தேவஸ்தான கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜன வரி மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தற்போது மேற்படி ஆலயத்தில் புனரமைப்பு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்புனரமைப்பு மற்றும் கும்பாபிஷேக நிகழ்வுக்கு பெருமளவு நிதி தேவைப்படுவதனால் சகல நன்கொடையாளர்களிடமிருந்தும் நிதி உதவி நாடி நிற்கின்றோம். நிதிப்பங்களிப்பை எதிர்பார்ப்பதனால் தங்களால் இயன்ற நிதி உதவியோ அல்லது பொருள் உதவியோ வழங்கி மேற்படி ஆலயத்தின் புனரமைப்பு மற்றும் கும்பாபிஷேகமும் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக மேலதிக தகவல்களை பெற விரும்புவோர் 021 222 3149,021 222 7764 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தங்களது காத்திரமான பங்களிப்பு தொகையினை நேரடியாக எமது வங்கிக் கணக்கில் (வங்கிக் கணக்கு இல: 8600925438 Commercial Bank யாழ்ப்பாணம்) வைப்புச் செய்ய முடிவதுடன் காசோலை மூலமான நிதி உதவியினை பரிபாலனசபை, ஞானவைரவர் ஆலயம் என எழுதப்படுவதுடன் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு காசோலையினை தலைவர் (நிர்வாக உத்தியோகத்தர் 11) ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சமேத ஞானவைரவர் தேவஸ்தானம்போதனாவைத்திய சாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-9)

# திருவெம்பாவை சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருவெம்பாவை சிறப்பு சொற்பொழிவு எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 அணிக்கு நாரந்தனை சிறிதான் தோன்றி மனோன்மணி அம்பாள் கோயிலில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு ஆசியுரையினை ஆலய பிரதம குருவும், திருவாசகம் என்னும் தேன் சிறப்பு சொற்பொழிவை சைவப் புலவர் கா.கமலநாதனும் நிகழ்த்தவுள்ளனர். (ந-8)

# சுனாமியின் கோர நிகழ்வுகளை நினைவுகூரும் நாள் நாளை

## 8ஆவது ஆண்டில் 'மீண்டும் எழுவோம்'

சுனாமி பேரலையின் கோர நிகழ்வுகளின் எட்டாவது ஆண்டினை நினைவுகூரும் மீண்டும் எழுவோம் என்ற நிகழ்வு யாழ்.திருமறைக் கலாமன்றம், மல்லாகம் தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரணையில் நாளைய தினம் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு துர்க்காபுரம் காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள சிற்பாலயம் கலைக்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் வரலாற்றுப் பதிவான சுனாமி சிற்பத்தின் முன்பாக பாதிக்கப்பட்டவர்களது வழிபாட்டு நிகழ்வுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து சிற்பக் கலைஞர் ஏவி ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியும், கடந்த 2 தசாப்த காலமாக மேற்குலக நாடுகள் பலவற்றிலும் காட்சிப்படுத்தப்பட்ட உலகப் புகழ்பெற்ற பல அரிய சிற்பப் படைப்புகளின் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

மீண்டும் எழுவோம் என்ற இந்நிகழ்வுகளில் இயற்கை அனர்த்தம், எதிர்வு கூறும் அச்சுறுத்தல் என்பவற்றிகு எப்படி முகம்கொடுப்பது? எப்படி எம்மை பாதுகாப்பது என்பது தொடர்பில் கருத்தமர்வுகளும் இடம்பெறவுள்ளது.

2004 டிசம்பர் 26-ம் நாள் உலகையே அதிர வைத்த ஆழிப்பேரலை அடுத்தடுத்து வந்து கொண்டு இருக்கும் புதிய திர்வுகள், வெள்ளப்பெருக்கு, எரிமலைகளின் சீற்றம், காலநிலை மாற்றம், தொடர்ந்துவரும் இயற்கை அனர்த்தங்கள், எதிர்வுகூறப்படும் அச்சுறுத்தல்கள் இவைகளுக்கு முகம் கொடுப்பது எப்படி? எம்மைப்பாதுகாப்பது எப்படி? என்பது சம்பந்தமான ஆய்வரங்குகள், அத்துறை சார்ந்தவர்களால் நிகழ்த்துப்படவுள்ளது. (ந-8)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நமக்குத் தேவையான மூன்று



உன் உடலில் ஏற்பட்டுள்ள கறையைப் பற்றிக் கவலைப் படாதே. இறைவன் என்னும் கருணைக் கடலில் மூழ்கி எழுந்தால் அது இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

உங்களிடம் அன்பு இருந்தால் ஆகாத செயல் என்று எதுவுமில்லை. நீங்கள் தன்னலத்தை துறந்து விட்டால் உங்களை எதிர்க்கும் சக்தி ஏதுமில்லை.

நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். அதனால் புனிதமும் பூரணத்துவமும் உங்களிடம் நிறைந் திருக்கிறது.

அன்பு ஒரு முதலீடு. எவ்வளவு போட்டாலும் அது மீண்டும் நம்மை வந்தடைந்து விடும்.

ஒட்டகம் முள் செடியைச் சாப்பிடும் போது வாயிலிருந்து இரத்தம் சொட்டும். இருந்தாலும் உண்பதை நிறுத்துவதில்லை. அதுபோல உலகத்தார் எத்தனையோ துன்பங்களுக்கு ஆளானாலும் உலகப்பற்றை அவர்கள் விடுவதில்லை.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் நமக்குத் தேவையில்லை. அன்புதான் வாழ்க்கையின் அடிப்படை ஆதாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சென்.சேவியர், ஆதிசக்தி அணிகள் வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகின்றது. இந்தத் தொடரின் ஆட்டங்கள் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகம், வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொலிகை விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் விண்மீன்கள் அணியை வீழ்த்தியது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வல்வை ஆதிச்க்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் போராடி வென்றது.

## உதைபந்தாட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 22 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் எதிர்வரும் ஜனவரி மாதம் 12,13,14 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

## கரம் சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட கரம் சங்கம் கழகங்களுக்கு இடையே ஆண், பெண் இருபாலாருக்கும் நடத்தும் கரம் சுற்றுப் போட்டி எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் உள்ளது. விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

போட்டிக்கான விண்ணப்ப முடிபு திகதி எதிர்வரும் 27 ஆம் திகதி ஆகும். போட்டிக்கான போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வு 28 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது என யாழ். மாவட்ட கரம் செயலாளர் எஸ். குமரேசன் தெரிவித்துள்ளார்.

## புதிய மெய்வன்மை நிர்வாகத் தெரிவு

வவுனியா மாவட்ட மெய்வன்மைச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே இந்தப் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது நிர்வாக சபையில் உள்வாங்கப்பட்டவர்களின் விபரங்கள் வருமாறு,

தலைவர்- தெய்வேந்திரன், உபதலைவர்கள் கே.மங்களகுமார், பி.கமலன், எஸ். சுதாகரன், செயலாளர் எஸ். அந்தரங்கன், பொருளாளர் எஸ். மயூரன், நிர்வாக சபை உறுப்பினர்கள் பி.மனோகரன், புருனேகார்த்திக், எஸ். முகுந்தன், எஸ். செந்தில்குமரன், கே. விஜிதரன்.

# காற்பந்தாட்ட முடிபுகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்குள் கடந்த புதன்கிழமை றொஞ்சஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விபரம் வருமாறு,

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

# யாழ். துடுப்பாட்ட சங்கத்திற்கு ஐந்து இலட்சம் நிதி உதவி

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் உபதலைவரும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் துடுப்பாட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் ஈஸ்ட் வெஸ்ட் சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான எஸ். மதிவாணனினால் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்திற்கு ரூபா 5 இலட்சம் நிதி கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் துடுப்பாட்டச் சங்கத்திலுள்ள அங்கத்துவக் கழகங்களின் வளர்ச்சிக்கென யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கச் செயலாளர் எஸ். விமலதாஸனிடம் மேற்படி நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கிடைக்கப்பெற்ற நிதியினைக் கொண்டு யாழ்ப்பாண விளையாட்டுக்கழகங்கள் சிலவற்றிற்கு வலைப்பயிற்சி மேற்கொள்வதற்கான திடல் அமைக்கப்படவுள்ளதாகவும் கழகங்களுக்கு வலைப்பயிற்சி திடல் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகள் இச் சுற்றுப் போட்டியில் பங்கு ப்ற்றுகின்றன. முதல் சுற்று ஆட்டங்கள் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்று தொடர்ந்து வெற்றிபெறும் அணிகள் இரண்டாம் சுற்று ஆட்டங்களில் வெளி மாவட்டப் பாடசாலைகளுடன் மோதும்.

முதல் ஆட்டங்கள் 2 நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியாகவும் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் ஒரு நாள் போட்டியாகவும் நடைபெறவுள்ளதாகவும் மாவட்ட அணியைப் போட்டிக்குத் தயாராகுமாறும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் சங்கத் தலைவர் றோயல் விமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

# றெஜின்போ விளையாட்டுக் கழகம் வெற்றி

திருநெல்வேலி விளையாட்டுக் கழகத்திக்கும் றெஜின்போ விளையாட்டு கழகத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் றெஜின்போ விளையாட்டுக்கழகம் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற திருநெல்வேலி விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி விளையாட்டுக்கழகம் 33 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 139 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அவ்அணி சார்பாக அதிகபட்சமாக அனோசன் 2 ஆறு ஓட்டங்கள் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 31 ஓட்டங்களையும் நிலாஜன் 4 ஓட்டங்கள் அடங்கலாக 16 ஓட்டங்களையும் யசோ 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

றெஜின்போ விளையாட்டுக்கழகம் சார்பாக தர்ஷன் 10 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களையும் விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் திலீப் 4 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களையும் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் டர்வின் 3 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களையும் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டுக்களையும் யானுசன் 7 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களையும் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

140 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய றெஜின்போ விளையாட்டுக்கழகம் அவ் இலக்கினை 19 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக் கொண்டது.

அவ் அணி சார்பாக அதிகபட்சமாக சௌமிதரன் 36 பந்துகளில் 5 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் உட்பட 71 ஓட்டங்களையும் டர்வின் 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 28 ஓட்டங்களையும் காண்டீபன் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி விளையாட்டுக்கழகம் சார்பாக நிலாஜன் 6 ஓவர்கள் பந்துவீசி 50 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டுக்களையும் சுவேந்திரன் 5 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் வேண்டும்

## நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சங்கக்கார



இலங்கை அணி அதிக டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் என இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு இலங்கை அணி குறைவான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவதை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரை முடித்துக் கொண்ட பின்னர்,

அடுத்த ஆண்டு பங்களாதேஷ், சிம்பாவே அணிகளுக்கு எதிராக தலா 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

அதன்பின்னர் டிசம்பர் மாதத்திலேயே முதல் 8 இடங்களுக்குள் உள்ள டெஸ்ட் அணிகளில் ஒன்றான பாகிஸ்தான் அணியுடன் டெஸ்ட் தொடர் ஒன்றில் பங்குபற்றவுள்ளது.


அடுத்த வருடத்தில் இலங்கை அணி பங்குபற்றவிருந்த 5 டெஸ்ட் போட்டிகள் இலங்கை கிரிக்கெட் சபையால் நிறுத்தப்பட்டதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள குமார் சங்கக்கார, ஒவ்வொரு நாடும் ஒரு வருடத்தில் 10 தொடக்கம் 12 வரையிலான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் எனவும் அதை உறுதிப்படுத்த அனைவரும் உறுதியாக இணைந்து செயற்பட்டு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களான டிலான் சமரவீர, பிரசன்ன ஜெயவர்த்தன, சானக வெலகெதர, சுராஜ் ராண்டீவ் ஆகியோரை மாத்திரமன்றி எல்லா வீரர்களையும் பாதிப்பதாகவும் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்த குமார் சங்கக்கார, டெஸ்ட் போட்டிகளில் அதிகமாக விளையாட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# அதிக ஓட்டங்களைப் பெற விரும்புகிறேன் -இலங்கை அணி உபதலைவர் மத்தியூஸ்



இலங்கை அணி சார்பாக அதிக ஓட்டங்களைப் பெற விரும்புவதாக இலங்கை அணியின் உப தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பெரிய ஓட்ட எண்ணிக்கைகளைப் பெற விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் அஞ்சலோ மத்தியூஸ் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்ற போதிலும் இதுவரை 11 அரைச்சதங்களையும் ஒரு சதத்தையும் மாத்திரம் பெற்றுள்ளார்.

இலங்கையின் துடுப்பாட்ட பயிற்சியாளர் மார்வன் அத்தப்பத்துவுடன் இணைந்து தனது துடுப்பாட்டம் தொடர்பாக அதிக கடும் பயிற்சிகளை மேற்கொண்டதாகவும், அண்மைக் காலத்தில் 70-80 ஓட்டங்களைப் பெறுவதாகவும் ஆனால் பெரிய ஓட்ட எண்ணிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான 70-80 ஓட்டங்கள் மூலம் அணிக்கோ தனக்கோ சிறந்த நன்மைகளை வழங்குவதாக தான் எண்ணவில்லை எனவும் தெரிவித்தார்.

இந்த 70-80 ஓட்டங்களை தான் மிகப்பெரிய ஓட்டங்களாக மாற்ற வேண்டும் எனத் தெரிவித்த அவர்,

சதங்களைப் பெற விரும்புவதாகவும் தெரிவித்தார்.

அதிக ஓட்டங்களைப் பெறாமைக்கு தனது கவனத்தை சிதறவிடுவது காரணமாகக் காணப்படலாம் எனத் தெரிவித்த அவர்,

70-80 ஓட்டங்களுக்கு அருகில் செல்லும் போது மேலும் சிறப்பான மனநிலையுடன் காணப்பட வேண்டும் எனவும், சதங்களைப் பெறுவதற்கு தயாராக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது போட்டியில் மெல்போர்ணில் 26ஆம் திகதி பங்குபற்றவுள் நிலையில், இலங்கை சார்பாக சிறந்த போர்மில் காணப்படும் வீரராக அன்ஜலோ மத்தியூஸ் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மெஸ்சியின் அதிரடியில் பார்சிலோனா வெற்றி



ரியல் வல்லாதோலித் அணிக்கெதிரான ஸ்பானிஸ் லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா- ரியல் வல்லாதோலித் அணிகள் மோதின.

இதில் தொடக்கம் முதல் பார்சிலோனா அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினாலும் முதல் பாதியில் ஷேவி(43வது நிமிடம்) மட்டும் ஒருகோல் அடித்தார்.

ரியல் வல்லாதோலித் அணி கோல் ஏதும் அடிக்கவில்லை.

பின்பு இரண்டாவது பாதியின் 59வது நிமிடத்தில் பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி ஒரு கோல் அடித்தார்.


இதற்கு வல்லாதோலிக் அணியின் ஜேவி (89) பதிலடி கொடுத்தார்.

போட்டியின் கடைசி நிமிடத்தில் பார்சிலோனா அணியின் கிறிஸ்டியன் டெல்லோ ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

முடிபில் பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றோரு போட்டியில் ரியல் மட்ரிட் அணி மால்காவிடம் 3-2 என்று தோல்வியடைந் தது.

# நியூசிலாந்துக்கு எதிராக கெவின் பீற்றர்சன் அவுட்



நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் தொடரிலிருந்து இங்கிலாந்து அணியின் கெவின் பீற்றர்சன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவருக்கு ஓய்வு வழங்குவதை உறுதிப்படுத்தும் முகமாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி 3 இருபது -20 சர்வதேச போட்டிகளிலும், 3 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும், 3 டெஸ்ட் போட்டிகளிலும் பங்குபெறவுள்ளது.

இருபது-20 போட்டிகள் பெப்ரவரி 9-ம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில் டெஸ்ட் போட்டிகள் மார்ச் 6-ம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.

இங்கிலாந்து சார்பாக 3 வகையான போட்டிகளிலும் பங்குபற்றுபவர் என்ற ரீதியிலும், அடுத்தாண்டு இங்கிலாந்தின் அதிகமான போட்டிகளையும் கருத்திற் கொண்டு இருபது-20 சர்வதேச போட்டிகள், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணியில் அவர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

**இருபது-20 அணி:**

ஸ்ரூவேர்ட் பிரோட் , ஜோனி பெயர்ஸ்ரோ, ரிம் பிரஸ்ணன், டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், ஜேட் டேர்ண்பக், ஸ்ரீபன் பின், அலெக்ஸ் ஹேல்ஸ், மைக்கல் லம்ப், ஸ்ரூவேர்ட் மீக்கர், இயன் மோர்கன், சமித் பட்டேல், ஜேம்ஸ் ட்ரெட்வெல், லூக் ரைட்.

# வாகன விப...

தங்கொட்டுவ பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சுண்ணாம்பு ஏற்றிச் சென்ற லொறியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தையடுத்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தார். (ந-11)

# நாட்டின் பல பாகங்கள்...

வடக்கு கிழக்கு உட்பட 18 மாவட்டங்களில் தொடரும் சீரற்ற காலநிலையின் பாதிப்பில் மாத்தளை மாவட்டமே அதிக பாதிப்பிற்கும் கூடுதலான உயிரிழப்பையும் சந்தித்துள்ளது.

இதில் அங்கு 9 பேர் மண்சரிவாலும், 3 பேர் வெள்ளத்தில் மூழ்கியும் 12 பேர் வரை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் நேற்றும் நேற்று முன்தினமும் பெய்துவரும் அடைமழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்து வருகின்றன.

இதனால் குடிமனைகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளதால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி, வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெள்ள அனர்த்தம் காரணமாக வவுனியாவில் சுமார் 200 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான உதவிகளை வவுனியா பிரதேச செயலகம் ஒவ்வொரு பிரதேச பிரிவுகளின் அடிப்படையில் வழங்கி வரு கின்றது.

இதேவேளை இன்னும் ஒரு சில தினங்களுக்கு இடியுடன் கூடிய மழை வடக்கு, வட மத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் மற்றும் அம்பாந்தோட்டை பகுதியிலும் பெய்யக்கூடும் எனவும் இலங்கை வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (ந-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விரிவுரையாளர்களின்...

முன்னர் வருமானமாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இதனை வருமானமாகக் கணக்கெடுப்பதற்கு தற்பொழுது தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன் - கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

புதியமாற்றங்களுக்கு அமைய விரிவுரையாளர்களுக்கு 60 வீதமான அதிகரிப்பும் - சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு 75 வீத அதிகரிப்பும் - இரண்டாம்தர சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு 80 வீத அதிகரிப்பும் - பேராசிரியர்களுக்கு 85 வீத அதிகரிப்பும் வழங்கப்படவுள்ளன.

இந்த அதிகரிப்பின் 50 வீதம் ஜனவரி மாதம் முதலும் எஞ்சிய அதிகரிப்பு ஜூன் மாதத்திலிருந்தும் வழங்கப்படவிருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுவிடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடிப்படைச்சம்பளத்துக்குசமானமாக ஜனவரி முதலாம் திகதியிலிருந்து கொடுப்பனவுகள் 25 வீதம் முதல் 35 வீதம் அதிகரித்து வழங்கப்படவிருப்பதாகவும் அந்தத் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-11)

## சுகாதார அமைச்சர்...

அரசாங்கத்தின் பிரதான அங்கத்துவ கட்சியான சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளராகவும் செயற்பட்டு வருகிறார். எதிர்கால 2ஆம் மற்றும் 3ஆம் தலைமுறைகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் இந்த முடிபை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் எதிர்கால சந்ததியினருக்கே எந்தவொரு தருணத்திலும் வாய்ப்பளிக்க தயாராக இருப்பதாக தெரிவித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள எண்ணியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

1979ஆம் ஆண்டு அமைச்சர் சிறிசேன மாவட்ட அமைப்பாளராக சிறிலங்கா சுதந்திர கட்சியில் இணைந்து கொண்டார். அனைத்திலங்கை சிறிலங்கா சுதந்திர கட்சி இளைஞர் அமைப்பிலும் அவர் தலைமை வகித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு பிரதான அரசியலில் களமிறங்கிய அவர் 1994ஆம் ஆண்டு தொடக்கம் பல அமைச்சரவைகளையும் தமது கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையும் வகித்து வந்துள்ளார். (ந-11)

புதிய முகவரி
ஹரன்
ஜுவல்லர்ஸ்
நகை வைர வியாபாரிகள்
இல.217 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6083, 0714182480

## 11 வான் கதவு...

கான மருத்துவ, சமைத்த உணவுகள், ஏனைய பொருள் உதவிகளை கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ கிளை வழங்கி வருகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இரணை மடுக்குளத்தின் கொள்ளளவு உயரம் 30 அடியாக இருந்த போதும் குளத்து நீரின் மட்டம் 31.06 அடியாக அதிகரித்ததன் காரணமாகவே இவ் 11 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-15)

## பாராளுமன்...

செய்ய ஜனாதிபதி தீர்மானித்திருந்தார்.

இந்தத் தீர்மானத்திற்கு அமைய விசாரணைகளை நடத்தி அதன் தீர்வுகாணப்படும் வரையில் பாராளுமன்ற அமர்வுகளை கூட்ட வேண்டாம் என அமைச்சர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 8-ம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## வெள்ளத்தில் மிதக்...

இவ்வாறு மிதந்து வந்த கண்ணிவெடிகள் ஒவ்வொன்றும் 15 கிலோக்கிராம் என்று படையினர் தெரிவித்துள்ளார். இவை விடுதலைப் புலிகள் அமைப்பினால் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை. வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் குளங்கள் பெருக்கெடுத்துள்ள நிலையில் 35 குளக்கட்டுகள் உடைப்புக்குள்ளாகியுள்ளன.

இவ்வாறான சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

அத்துடன் சகல அரச ஊழியர்களின் விடுமுறைகளும் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் அறிவித்துள்ளார். (ந-11)

A/L - 2015
(கலை, வர்த்தகம்)
ஜனவரி 5
காலை 9 மணிக்கு
எமது பலம்
D.Sam
B.S. பசில்
S.S. சிறி
சந்திரசேகர்
ஜோதீஸ்வரன்
இளங்கோ
பாபு
பத்மன்
பவன்
மங்களேஸ்
சசி
ஜோன்ஷன்
தவசேகர்
சுதர்ஷன்
DMI Jaffna

## காணாமல் போவது...

அல்லது வேறு வெளிநாட்டு நிறுவனங்களிடமோ முறைப்பாடு செய்யக்கூடாது என்றும் படையினர் எச்சரித்துவிட்டுச் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தமக்கு முறைப்பாடு செய்துள்ளதாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக குரல் கொடுக்கின்ற அமைப்பொன்றின் தலைவி பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார்.

தம்பலகாமத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இராணுவ வாகனமொன்றில் சென்ற நபர்கள், விடுதலைப் புலிகளோடு தொடர்புடைய எவராவது அங்கு வசிக்கிறார்களா என்று தேடிச் சென்றதாகவும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி கூறினார்.

மக்கள் தமது காணாமல்போன உறவினர்கள் தொடர்பில் வெளிநாட்டு அமைப்புக்களிடம் முறையிடக்கூடாது என்றும் படையினர் எச்சரித்துச் சென்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமது கணவன்மாரும் பிள்ளைகளும் கடத்தப்பட்ட போது அவர்களை விடுவிப்பதற்காக தம்மிடம் கப்பம் பறித்த ஆயுதக்குழுக்களைச் சேர்ந்த பலரும் எந்தவிதமான பிரச்சினைகளுமின்றி தமது பிரதேசங்களில் நடமாடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடத்தப்பட்டு காணாமல்போனவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் சிரமப்படுவதாகவும் அந்தக் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அரசாங்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கூறுகின்றன.

2008-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு காலப்பகுதியில் போர் உச்சத்தில் இருந்தபோது, ஆயுதக்குழுக்களால் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களின் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் தமது அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இதேவேளை, தம்பலகாமம் பகுதியில் மக்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி இலங்கைப் படைத்தரப்பின் கருத்துக்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)


எல்லோருக்கும் எம் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
WESTERN UNION MONEY TRANSFER
தொடர்ந்தும் உங்கள் சேவையில்
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No: 0212225392

பதவி வெற்றிடம்
பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் தேவை.
➢ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(ஆண்கள் பகல், இரவுக் கடமைகள்)
➢ பத்திரிகை மடிப்பவர்கள்
(ஆண்கள் இரவுக் கடமை)
தகைமையும், விருப்பமும் உடையவர்கள் 27.12.2012 அன்று பகல் 10 மணிக்கு நேரில் வரவும்.
வலம்புரி
இல. 3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
(இ)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
Alliance Francaise de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Francaise De Jaffna மட்டுமே. சர்வதேச தரம் வாய்ந்த Alliance Francaise De Jaffna இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.
தரமான Certificate ஐ பெறுங்கள்
வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
(1330)
61, Kachcheri - Nallur Road, Jaffna. Phone : 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com
(ருக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

# மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை லோகேந்திரா (லோகு)



அல்லைப்பிட்டி 2-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை லோகேந்திரா (லோகு) நேற்றுத் திங்கட்கிழமை (24.12.2012) பாரிஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் இராசம்மா தம்பதியரின் புதல்வனும், மண்டைதீவைச் சேர்ந்த திருநாவுக்கரசு - பராசக்தி தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் (வசந்தி) அன்புக்கணவரும் சங்கவி, சஜித்தன், சங்கவை ஆகியோரின் தந்தையும், ஜெயசுந்தரராஜா (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), சியாமளா (பிரான்ஸ்), மஞ்சுளா (ஜேர்மனி), சோமேஸ்வரி (பிரான்ஸ்), தெய்வேந்திரா (பிரான்ஸ்), விஜயேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், குலேந்திரா, மகாலிங்கம், ராஜ்குமார், இரட்ணமணி, ரூபவதி, கவிதா, விநாயகமூர்த்தி (வலயக்கல்வி அலுவலகம், தீவகம்), சத்தியமூர்த்தி, லோகேஸ்வரி (சுவிஸ்), லோகநாதன் (கனடா), ரகுநாதன் (மோகன்-முகாமையாளர்-யாழ்.பெற்றா எசன்ஸ் சப்பிளையர்ஸ்), கேதாரநாதன், காலஞ்சென்ற பஞ்சாட்சர நாதன் (வலயக்கல்வி அலுவலகம், தீவகம்), விக்னேஸ்வரி (பிரான்ஸ்) ஜெகநாதன், ஜெகதீஸ்வரி, செந்தில்நாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் 27.12.2012 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
செல்லத்துரை நடேசபிள்ளை
(சிறிய தந்தை)
பொ.வி.திருநாவுக்கரசு
(மாமன்)

130, இராசாவின் தோட்ட வீதி,
நல்லூர்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.